# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தனிச்சுற்றுக்கு
நன்கொடை
ரூ-20

மே-2015

பருவம் 1 புனல் 8



## உலகமயமாகிறது
# யோகா மோசடி

ஜாதி எப்படி ஒழியும்? அவரவர் தம் அக்காள் மகளையும், அத்தை மகளையும் மணஞ்செய்து கொண்டேயிருந்தால் ஜாதி ஒழிந்து விடுமா? நாடார் நாடாரையும், வன்னியர் வன்னியரையும், நாயுடு நாயுடுவையும், அய்யர் அய்யரையும், முதலியார் முதலியாரையும், ஆதிதிராவிடர் ஆதி திராவிடரையுமே திருமணஞ்செய்து கொண்டிருந்தால், இன்னும் பத்து நூறாண்டுகள் ஆனாலும் ஜாதி ஒழியப்போவதில்லை.

பெரியார் - விடுதலை - 01.09.1950

தானே தனக்கு வேண்டிய காதலனை தெரிந்தெடுத்துக் கொள்ள பெண்களைப் பழக்கப்படுத்த வேண்டும். இம்மாதிரியாகப் பழக்கினோ மானால் பெண்கள் உலகம் தலை சிறந்து சுதந்திரம் பெற்று உலகத்திற்குப் பெருத்த உதவியாக இருக்கும்.

பெரியார் - குடி அரசு - 28.09.1930

04.04.1982



சோ.கௌரி- ஆ.சோதிவேலு

பார்ப்பன ஆதிக்க ஒழிப்பு மாநாட்டு மேடை

தலைமை: ஆசிரியர் வீரமணி

05.09.2010



சோ.பெரியார்செல்வி-அ.ப.சிவா

தலைமை: தோழர் கொளத்தூர்மணி

2015 மே

பல்லடம்

22

# தொடரும் பெரியாரியல் வாழ்வியலில்


# வாழ்க்கைத் துணை நல ஏற்பு விழா

திருமணம்: காலை-11 மணி

சார்-பதிவாளர் அலுவலகம், பல்லடம்

வரவேற்பு: மாலை-5 மணி

முகில் நிலா அரங்கம், பல்லடம்



**க.முத்துராஜா**

**சோ.அன்புமணி**

**ஜாதி மறுத்து**
**சடங்கு மறுத்து, தாலி மறுத்து**
**இணையர்களின் விருப்பத்தோடு**
**நடக்கவிருக்கும் எங்கள் குடும்பத்தின்**
**மூன்றாவது சுயமரியாதை திருமண**
**விழாவிற்கு தங்களை**
**அன்புடன் அழைக்கிறோம்.**

தோழமையுடன்.........

| | |
|---|---|
| சோ.பெரியார்செல்வி | சோ.கௌரி |
| அ.ப.சிவா | ஆ.சோதிவேலு |
| பெ.ப.நறுமுகை | சோ.திராவிடராணி |

கருந்திணை உறவுகள்

காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தொகுப்புக்குழு
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
கொளத்தூர் குமார்
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

சட்ட ஆலோசனைக்குழு
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

விளம்பரத் தொடர்பு
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

விற்பனைத் தொடர்பு
ஆ. பாண்டியன் 96591 12891,
கடத்தூர் காந்தி 99428 76665
வெங்கட் 95788 44141

சந்தா தொடர்பு
அ. கிருட்டிணகுமார்
97882 97428

வடிவமைப்பு
Mukizh Media

அச்சு
செல்வக்குமார்
BS Graphics, Chennai

அலுவலக நிர்வாகம்
சி. இராவணன் 97868 89325

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு
காட்டாறு, 1 / 810
முத்தமிழ்நகர், நத்தம் சாலை,
திண்டுக்கல். 624003
kaattaaru2014@gmail.com

வெளியீடு:
சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம்

# "குஷ்பு கோவிலும் கண்ணகி சிலையும் ஒன்றுதான்"

"...தமிழர் வரலாற்றுச் சிறப்பின் அடையாளமாகவும், அறச்சீற்றத்தின் வடிவமாகவும் விளங்குகின்ற கண்ணகியின் சிலையை 2001 டிசம்பரில் முதலமைச்சர் செயலலிதா, தலைமை செயலகம் வரும் போதெல்லாம் கண்ணில் ஓர் அபசகுணமாக, அருவருக்கத்தக்க சிலையாக நின்றது என்று அப்புறப்படுத்த ஆணையிட்டார்...

திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் கண்ணகி சிலையை செயலலிதா அப்புறப்படுத்திய போது மகிழ்ச்சி தெரிவித்து அச்செயலை அறிக்கை மேல் அறிக்கை வெளியிட்டு வரவேற்றார். 2006ல் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் கண்ணகி சிலையை மீண்டும் நிறுவிய போது வீரமணிக்கு வெட்கம் வந்ததா தெரியவில்லை. இப்போது கண்ணகி சிலையின் காலடியில் அ.தி.மு.க. அமைச்சர்கள் சித்திரை முழுநிலவு நாளையொட்டி 03.05.15 இல் மாலை அணிவித்து வணங்கி இருக்கிறார்கள். அ.தி.மு.க.வினர் மண்டியிடும் போது வீரமணிக்கு வெட்கம் வந்ததா தெரியவில்லை. இவற்றை எல்லாம் விளக்கி பெரியாரிய பகுத்தறிவு வழியில் வீரமணி ஒரு அறிக்கை வெளியிட்டால் அவருடைய நிலைபற்றி அறிய உதவியாக இருக்கும்."என்று 04.05.15 அன்று தமிழ்தேசியப் பேரியக்கத் தலைவர் மணியரசன் மின்னஞ்சலில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

நம்மைப்பொறுத்தவரை குஷ்புவுக்கு கோவில் கட்டியதற்கும் கண்ணகிக்குச் சிலை வைத்ததற்கும் எந்த வேறுபாடும் இல்லை. குஷ்பு என்பவர்கூட உயிரோடு நம்மிடையே வாழ்ந்து வருபவர். அப்படி ஒரு உயிர் வாழ்வதற்கு ஆதாரம் இருக்கிறது. ஆனால் கண்ணகி என்பவரோ, கோவலன் என்பவரோ வாழ்ந்ததற்கான ஆதாரம் என்ன? பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள - வாழும் ஒரு கதாநாயகிக்குக் கோவில் கட்டியதைவிட, இல்லாத ஒரு கற்பனைக் கதா நாயகிக்குச் சிலை வைப்பதும், அந்தச் சிலையை முன்வைத்து அரசியல் நடத்துவதும் மிகவும் கேவலமான - அறிவுக்குப் பொருந்தாத செயலாகும்.

இப்படிப்பட்ட மூடநம்பிக்கைகளையும் - கண்ணகி பக்தர் களின் செயல்களையும் தமிழ்நாட்டில் உள்ள பெரியார் தொண்டர்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். 1968 இல் கண்ணகிக்குச் சிலை வைத்ததற்காக அண்ணா, கலைஞர் ஆகியோரையும் அதன்பிறகு அந்த சிலையை வைத்து இன்று வரை அரசியல் செய்யும் அனைத்து அரசியல் கட்சியினர், தமிழ்த்தேசிய அமைப்பினர் அனைவரின் செயல்களையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்த நேரத்தில் கண்ணகியைப் பற்றியும், அவரைக் கதாநாயகியாக்கி எழுதப்பட்ட சிலப்பதிகாரத்தைப் பற்றியும் பெரியார் என்ன பேசினார் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். பெரியாரின் கட்டுரை தனியாக வெளியிடப் பட்டுள்ளது. படியுங்கள். பரப்புங்கள்.

# “நான் ஜாதியற்றவன், நாத்திகன்”

## திண்டுக்கல் மாவட்டத்தில் முதல் மாணவரான 'திராவிடன்' பிரகடனம்

நேர்காணல்: முனைவர்.பூ.மணிமாறன்



2015 மார்ச் மாதத்தில் நடந்து முடிந்த 12 ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் கருந்திணைக் குடும்பத்தைச் சேர்ந்த பழனி ‘J M திராவிடன்’ திண்டுக்கல் மாவட்டத்திலேயே முதல் மாணவராகவும், மாநில அளவில் நான்காம் இடத்திலும் தேர்வு பெற்றுள்ளார். இன்றைய கல்விச்சூழலில் பின்பற்றப்படும் பயிற்றுமுறைகள் மாணவர்களுக்கு உகந்ததாக இல்லை. பள்ளிகளுக்கு இடையே ஏற்றத்தாழ்வுடனேயே பின்பற்றப்படுகின்றன. வெறுமனே மதிப்பெண் பெறும் விதமான வித்தையைத்தான் பயிற்றுமுறைகளாகக் கொண்டுள்ளனர். மேலும் வகுப்பறைகள் பெரும்பாலும் மாணவர்களை மய்யப்படுத்தாத வகுப்பறைகளாகவே உள்ளன. ஆசிரியரின் ஒற்றைக்குரல் மட்டுமே அதிகாரத்தைப் பிரதிபலிப்பதாக அங்கே ஒலிக்கிறது. தேர்வுகள் மாணவர்களைப் பயமுறுத்தும், நடுங்கச்செய்யும் விதமாக உள்ளன. புரிந்து படிக்காமல் மனப்பாடம் செய்து வாந்தி எடுக்கும் முறையாக மட்டுமே உள்ளது. இத்தகைய கல்விச்சூழலில் ‘திராவிடன்’ இந்த வெற்றியை எப்படிப் பெற்றார்? அதன் பின்னணி ஆகியவை குறித்து அவருடன் நடத்திய உரையாடல் இது.

**மணிமாறன்:** *தாங்கள் பெற்ற மதிப்பெண்கள் என்ன? விளக்கமாகக் கூறவும்.*

**திராவிடன்:** *மொத்தமதிப்பெண் 1184. தமிழ் 196, ஆங்கிலம் 188, இயற்பியல் 200, கணிதம் 200, வேதியியல் 200, உயிரியல் 200. மருத்துவத்துறைக்கான கட்-ஆஃப் 200, பொறியியல் கட் ஆஃப் 200.*

**மணிமாறன்:** *தங்களுக்கு விருப்பமான பாடம் என்ன? அதற்கான காரணம் என்ன?*

**திராவிடன்:** *எனக்கு இயற்பியல் மிகவும் விருப்பமான பாடம். ஏனென்றால், இயற்பியல் சுலபமாக இருக்காது. நன்றாக சிந்திக்கத் தூண்டும், சிந்தனையைத் தூண்டும். அறிவியல் குறித்து ஏராளமாக அறிந்துகொள்ள முடியும் என்பதால் இயற்பியல் எனக்குப் பிடிக்கும். குறிப்பாக கடவுள் உலகைப் படைத்தார் என்பதை மறுப்பதற்கான அறிவியல் காரணங்கள் இயற்பியலில்தான் உள்ளன. மேலும் எனது இயற்பியல் ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகளும் காரணம்.*

**மணிமாறன்:** *தங்களது குடும்பப்பின்னணி என்ன?*

**திராவிடன்:** *எனது தாயார் ஜாக்குலின், தந்தை பெயர் ஜவகர். இருவரும் ஜாதி மத தாலி சடங்கு மறுப்புத் திருமணம் செய்தவர்கள். பெரியார் கொள்கைகளை வாழ்வில் பின்பற்றுபவர்கள். இருவருமே ஆசிரியர்கள். மேலும் எனது தந்தையார் பழனியில் கராத்தேயில் யோ ஷு கான் ஷிடோ ரியூ ஸ்டைலைப் பயிற்றுவிக்கும் சென்சாய் ஆவார். கருந்திணைப் பண்பாட்டுக் குடும்பத்தில் எங்கள் குடும்பமும் ஒரு அங்கமாகும்.*

**மணிமாறன்:** *கருந்திணைப் பண்பாட்டுக் குடும்பம் என்றால் என்ன? அதில் தங்களது பங்கு என்ன?*

**திராவிடன்:** ஏதோ ஒரு கடவுள் சொன்னார், யாரோ ஒரு மதத்தலைவர் சொன்னார் என்பதற்காக அவற்றை நம் வாழ்க்கையில் கடைபிடிப்பதைவிட - நமது வாழ்க்கையில் நமது பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் அறிவியலின் அடிப்படையில் ஆராய்ந்து பார்த்து அதன் அடிப்படையில் வாழ்ந்து வருபவர்கள் அனைவரும் இணைந்து நிற்கும் இடம்தான் கருந்திணைப் பண்பாடு.

**மணிமாறன்:** *குடும்பம் அளித்த ஒத்துழைப்புகள் என்ன?*

**திராவிடன்:** என் பெற்றோர் என்னைப் படிக்கச்சொல்லி என்னை வற்புறுத்தியதில்லை. அது மிக முக்கியமான ஒத்துழைப்பு. என்னை உரிய நேரத்திற்கு எழுப்புவது, சத்தான உணவுகளைத் தயாரித்துக்கொடுப்பது போன்றவற்றில் கவனம் செலுத்தினார்கள். படிப்பைப் பாதிக்கும் வகையில் டிவி, சினிமா போன்றவற்றில் நான் கவனம் செலுத்தியதில்லை. அப்படி விடுமுறை நாட்களில் நான் டி.வி பார்த்தாலும் என் பெற்றோர் அதில் தலையிடுவதில்லை. நிறைய காமிக்ஸ் புத்தகங்கள், அறிவியல் ஆய்வுப் புத்தகங்கள், பெரியார் புத்தகங்கள் போன்றவற்றை நிறைய படிப்பேன். அவற்றில் எழும் சந்தேகங்களைப் பெற்றோரிடம் கேட்டு விளக்கம் பெறுவேன். இதுபோன்ற பொதுவான அறிவியல் கருத்துக்கள் எனது பாடங்களைப்புரிந்துகொள்ளப் பயன்பட்டன.

**மணிமாறன்:** *பள்ளி அளித்த ஒத்துழைப்பு என்ன?*

**திராவிடன்:** நான் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்திலுள்ள கிருஷ்ணா மெட்ரிக் மேனிலைப்பள்ளியில் மாநிலக்கல்விமுறையில் ஆங்கிலவழிக்கல்வியில்(State Board English Medium) படித்தேன். பள்ளித்தாளாளர் திரு. திருப்பதி அய்யா அவர்களும், முதல்வர் திரு.செந்தில் அவர்களும், வகுப்பு ஆசிரியர்கள் அனைவரும் நான் அதிக மதிப்பெண்கள் பெற ஊக்க மளித்தனர்.

பள்ளியைப் பொறுத்தவரை எனது ஆசிரியர்கள் அனைவரும் முதலில் அவர்கள் நடத்தும் பாடத்தை அவர்கள் முழுமையாகப் புரிந்துகொண்டிருந்தார்கள். எனவே எங்களுக்குப் பாடத்தைப் புரியவைத்தார்கள். எந்த சந்தேகங்கள் இருந்தாலும் பொறுமையாக விளக்கங்களைக் கூறுவார்கள். அந்த நேரத்தில் அவர்களால் புரியவைக்க முடியாவிட்டாலும் பின்னர் தேவையான விளக்கங்களோடு சந்தேகங்களைத் தீர்த்துவைப்பார்கள். சிறப்பு வகுப்புகள் என்று எதுவும் நடத்தவில்லை. அரசு விடுமுறைகள் அனைத்தும் விடுமுறையாகவே இருந்தன. அவ்வப்போது நிறைய பயிற்சித் தேர்வுகள் வைத்தார்கள். வீட்டிலோ, பள்ளியிலோ மாணவர்களைப் படி, படி என்று யாரையும் தொல்லைகொடுப்பதில்லை.

> **எந்த வழிக்கல்வியானாலும் பாடங்களைப் புரிந்துபடிப்பதே முக்கியம். புரிந்துகொண்டு படித்தால் ஆங்கிலவழிக்கல்வி எளிதுதான். அதுதான் உயர்கல்விக்கும் அறிவியல் ஆராய்ச்சிக்கும் பயன்படும்.**

**மணிமாறன்:** *இவ்வளவு அதிகமான மதிப்பெண்கள் பெற தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன?*

**திராவிடன்:** பள்ளியில் நடத்தும் பாடங்களை அன்றைக்கு மாலையே மீண்டும் ஒருமுறை படித்துப் புரிந்துகொள்வேன். மாலையில் சுமார் இரண்டு மணிநேரம் படிப்பேன். தேவைப்பட்டால் மறுநாள் காலை 45 நிமிடம் படிப்பேன். படிப்பது என்றால் மனப்பாடம் செய்வது அல்ல. பாடத்தை முதலில் முழுமையாகப் படித்துப் புரிந்துகொள்வேன். பிறகு முக்கியமான சில கேள்விகளுக்கு உரிய பதில்களை மட்டும் மீண்டும் மீண்டும் வாசிப்பேன். ஆனால் பாடத்திற்கென்று பாடப்புத்தகத்தைத் தவிர வேறு எந்த நோட்ஸ்களையோ, ஸ்டடி மெட்டீரியல்களையோ, மாதிரி வினா விடைப் புத்தகங்களையோ படிப்பதில்லை.

எந்தவகைக் கேள்விகள் என்றாலும் அவை எதுவானாலும் பாடப்புத்தகங்களில் இருந்து மட்டுமே கேட்கப் படுகின்றன. எனவே பாடப்புத்தகங்களில் உள்ள பாடங்களை மட்டும் முழுமையாகப் புரிந்துகொள்வேன். அப்படியே சுயதேர்வு போன்றவற்றிற்கு வினாக்கள் தேவையென்றாலும் (Self Test) பெற்றோர் ஆசிரியர் கழகம் (PTA) வெளியிட்டுள்ள வினாவங்கி பள்ளியிலேயே கிடைக்கிறது, அதை வாங்கிப் பயன்படுத்திக்கொள்வேன். ஏற்கனவே நான் எழுதிய தேர்வுகளின் தேர்வுத்தாள்கள் வீட்டில் இருக்கும் அவற்றை படிப்பேன். அதில் இருக்கும் சரி, தவறுகளைப் பார்த்துக் கொள்வேன்.

**மணிமாறன்:** *நினைவாற்றல் பற்றி தங்களின் கருத்து என்ன?*

**திராவிடன்:** தேவைப்படும் விசயமும், பிடித்த விசயமும் மறக்காது. அந்த அடிப்படையில் எனது

**கடவுள் நம்பிக்கைக்கும் நம் வாழ்வின் எதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. விடாமுயற்சி, கடின உழைப்பு, தன்னம்பிக்கை, பெற்றோரின் ஊக்குவிப்பு இவைதான் முக்கியம்.**

படிப்பு எனக்கு விருப்பமானதாகவும் தேவையானதாகவும் இருந்தது. எனவே நான் எதையும் மனப்பாடம் செய்ததில்லை.

**மணிமாறன்:** படிப்பைத் தவிர வேறெந்தத் துறைகளில் தங்களுக்கு ஈடுபாடு உண்டு?

**திராவிடன்:** கராத்தே, சதுரங்கம், ஓவியம், பேச்சுக்கலை இவற்றில் ஈடுபாடு உண்டு. கராத்தேயில் ப்ளாக் பெல்ட் II nd DAN க்ரேட் வாங்கியுள்ளேன். தென் தமிழ்நாடு அளவிலான கராத்தே போட்டிகளில் சாம்பியனாக வென்றுள்ளேன். சதுரங்கப்போட்டியில் ஈரோடு மண்டல அளவில் நான்காம் இடத்தில் வென்றுள்ளேன்.

**மணிமாறன்:** பிற துறைகளின் ஈடுபாடு படிப்பைப் பாதித்ததா?

**திராவிடன்:** படிப்புக்கு இவை துணையாகவே இருந்தன. உடல் நலம்தான் மனநலத்திற்கு அடிப்படை. எனவே எனது கராத்தே பயிற்சிகள் மனதை இலகுவாக வைத்திருக்கும். அதுதான் பாடங்களைப் புரிந்துகொள்ள அடிப்படையாக இருந்தது.

**மணிமாறன்:** ஆங்கிலவழிக்கல்வி, தமிழ்வழிக்கல்வி இவை குறித்த தங்களது கருத்து என்ன?

**திராவிடன்:** நான் எல்.கே.ஜி யில் இருந்தே ஆங்கிலவழிக்கல்வியில்தான் படித்தேன். ஆனால் ஏழாம் வகுப்புவரை எனது பாடங்களை அதாவது ஆங்கிலத்தில் இருந்த எனது பாடங்களை எனது பெற்றோர் தமிழ்ப்படுத்திப் புரியவைத்தனர். அதன் பிறகு பாடங்களைத் தமிழ்வழியில் புரிந்துகொள்ளத் தொடங்கினேன். உயர்வகுப்புகளில் ஆங்கிலத்திலேயே புரிந்துகொள்ள முடிந்தது. ஆங்கில வழிக்கல்வி மிகவும் எளிதாகிவிட்டது.

**மணிமாறன்:** தமிழ்வழிக்கல்வி குறித்த தங்களது கருத்து?

**திராவிடன்:** எந்த வழிக்கல்வியானாலும் பாடங்களைப் புரிந்துபடிப்பதே முக்கியம். புரிந்துகொண்டு படித்தால் ஆங்கிலவழிக்கல்வி எளிதுதான். அதுதான் உயர்கல்விக்கும் அறிவியல் ஆராய்ச்சிக்கும் பயன்படும்.

**மணிமாறன்:** இனிவரும் மாணவர்களுக்கான வழிகாட்டும் குறிப்புகள் என்ன?

**திராவிடன்:** ஆசிரியர்கள் சொல்வதைக் கேட்கவேண்டும். அவர்களுக்கு நாம் ஒத்துழைப்புக் கொடுத்தாலே போதும் அவர்கள் நம்மை வெற்றிபெற வைப்பார்கள். சோம்பேறித்தனமாக இருக்கக்கூடாது. அவ்வப்போது பாடங்களைப் படித்துவிட வேண்டும்.

**மணிமாறன்:** தங்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா?

**திராவிடன்:** எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. எனது பெற்றோரும் எந்தக் கடவுளையும் எனக்கு அறிமுகப்படுத்தியதில்லை. நான் ஆர்தர் எஸ்.கிரிகர் எழுதிய அறிவியலின் வரலாறு, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் வெளியிட்ட கருவாச்சியின் கதை, உயிர்தோன்றிய வரலாறு பெரியார் எழுதிய மனிதனும் மதமும் போன்ற நூல்களைப் படித்தேன். பொருளுக்கு நிறை எப்படி வந்தது என்பதை விளக்கும் HiggsBoson என்ற துகள் குறித்த தகவல்களை இணைய தளங்களின் வழியாகப் படித்தேன். பிரபஞ்சம் தோன்றியதில் இந்தத் துகள்களின் பங்கு இருப்பதைப் புரிந்துகொண்டேன். உலக வரலாறுகளில் மதகுருக்களால்தான் கடவுள் படைக்கப்பட்டதைப் பற்றி நிறையப் படித்திருக்கிறேன்.

எனது பள்ளிச்சான்றிதழில் No Caste ஜாதியற்றவன் என்றுதான் பதிவுசெய்துள்ளேன். வேலைவாய்ப்பு அலுவலகத்தில் Atheist நாத்திகன் என்றுதான் பதிவுசெய்துள்ளேன்.

**மணிமாறன்:** கடவுள் நம்பிக்கை இல்லாமல் இந்த வெற்றியை எப்படிப் பெறமுடிந்தது?

**திராவிடன்:** கடவுள் நம்பிக்கைக்கும் நம் வாழ்வின் எதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. விடாமுயற்சி, கடின உழைப்பு, தன்னம்பிக்கை, பெற்றோரின் ஊக்குவிப்பு இவைதான் முக்கியம். எனது சக மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறவேண்டும் என்பதற்காக பிள்ளையார் டாலர் அணிவது, கோவில்களில் விசேச பூஜைகள் நடத்தி ஆரஞ்சு வண்ணக் கயிறுகளைக் கட்டுவது போன்ற பல மூடநம்பிக்கைக்காரியங்களைச் செய்தனர். ஆனால் நான் அவை எதையும் செய்யவில்லை. படிப்பை மட்டுமே கவனித்தேன்.

**மணிமாறன்:** தேர்வு முடிவு வந்தவுடன் தங்களது மனநிலை என்ன?

**திராவிடன்:** அப்போது அப்பா அருகில் இருந்தார். மகிழ்ச்சியில் அப்பாவைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தேன்.

**மணிமாறன்:** சொந்த வாழ்வில் தங்களது எதிர்காலத்திட்டம்?

"பாடத்திற்கென்று பாடப்புத்தகத்தைத் தவிர வேறு எந்த நோட்ஸ்களையோ, ஸ்டட்டி மெட்டீரியல்களையோ, மாதிரி வினா விடைப் புத்தகங்களையோ படிப்பதில்லை.

**திராவிடன்:** மருத்துவராவது எனது இலட்சியம். மருத்துவராக மட்டுமல்ல மருத்துவத்துறையில் உயர் ஆராய்ச்சியிலும் ஈடுபடவேண்டுமென்பதே எனது இலட்சியம்.

**மணிமாறன்:** சமுதாயத்திற்கு எந்தவகையில் தொண்டாற்ற நினைக்கிறீர்கள்?

**திராவிடன்:** மருத்துவராகி குறைந்த கட்டணத்தில் மருத்துவச்சேவை செய்வேன். ஆராய்ச்சியில் ஈடுபட்டு புதிய மருந்துகளைக் கண்டுபிடிப்பது. மக்களுக்கு குறைந்த விலையில் மருந்துகள் கிடைக்கச்செய்வது போன்ற வேலைகளில் ஈடுபடுவேன்.

**மணிமாறன்:** சிறந்த மதிப்பெண்கள் பெற பெற்றோர்கள் செய்ய வேண்டியது என்ன?

**திராவிடன்:** பெற்றோர் கொஞ்சம் தியாகம் செய்யத் தயாராகவேண்டும். பிள்ளைகளைப் படிக்கச் சொல்லிவிட்டு பெற்றோர்கள் அல்லது மற்ற குடும்ப உறுப்பினர்கள் டி.வி பார்ப்பது, பொழுதுபோக்கு விசயங்களில் ஈடுபடுவது போன்றவற்றைத் தவிர்க்கவேண்டும். சக மாணவர்களோடு நம்மை ஒப்பிட்டுப் பேசக்கூடாது. சில சமயங்களில் பள்ளியில் ஆசிரியர்கள் எங்களை கண்டிக்கும்போது, வீட்டில் பெற்றோரும் சேர்ந்து கண்டிக்காமல் ஆதரவாக, அரவணைப்போடு நடந்துகொள்ள வேண்டும். பொறுமையாக சிக்கலைப் புரிந்துகொண்டு அதிலிருந்து மீண்டுவர வழிகாட்டவேண்டும்.

**மணிமாறன்:** பெரியார் பற்றிய தங்கள் கருத்து என்ன?

**திராவிடன்:** ஒரு நல்ல வழிகாட்டி.




## காட்டாறுக்கு ரூ 30,000.00 நன்கொடை

காட்டாறு ஏட்டின் கணினியாக்கப் பணிகளுக்காக பொள்ளாச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் விஜயராகவன் - இரா. தனலட்சுமி இணையர் ஒரு நவீன கணினியை நன்கொடையாக வாங்கிக் கொடுத்துள்ளனர்.

அதன் மதிப்பு 30,000 ரூபாய் ஆகும். தமது ஓய்வூதியப் பணத்திலிருந்து தங்களது சக்திக்கு மீறி இவ்வளவு பெரிய தொகையை காட்டாற்றுக்கு வழங்கியுள்ளனர்.

மேலும் தங்களது பேத்தியும், மீனாட்சி - லோகநாதன் இணையரின் மகளுமான மீ.லோ.இனியாவின் பிறந்த நாளை (23.05.15) முன்னிட்டு ரூ.1000.00 நன்கொடை வழங்கினார்கள்.

நாம் பலமுறை மறுத்தோம். தயங்கினோம். எனினும் நமது தேவை என்ன என்பதைப் புரிந்துகொண்டு திண்டுக்கல்லுக்கு நேரடியாக வந்து கணினியையும் வாங்கி வைத்துவிட்டுச் சென்றார்கள்.

அவர்கள் செய்த உதவி காட்டாற்றின் தேவையையும், காட்டாற்றின் மீது அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் வெளிப் படுத்துகிறது. இந்த நம்பிக்கை நமக்கு இன்னும் பயத்தைத்தான் உருவாக்குகிறது. நம்பிக்கைகளைக் காப்பற்றுவோம்.

பெங்களூரில் பொறியாளராகப் பணியாற்றும் தோழர் சௌந்திரராசன் காட்டாறு ஏட்டிற்கு ரூ. 2000.00 நன்கொடையாக வழங்கினார்.

அமெரிக்காவில் மென்பொருளாளராகப் பணியாற்றும் தோழர் பிரபாகரன் அழகர்சாமி அவர்கள் ரூ. 10,000.00 நன்கொடையாக வழங்கியுள்ளார். காட்டாறு தொடங்கிய நாளிலிருந்து அமெரிக்காவில் பணிபுரியும் அவரது நண்பர்கள் நிர்மல்குமார், ஜெயபிரதீப், பூவண்ணன், யூகேந்தர் குமார் ஆகியோருடன் இணைந்து தொடர்ச்சியாக நன்கொடை வழங்கி வருகிறார்.

தோழர்கள் அனைவருக்கும் காட்டாறு ஏட்டின் சார்பாக நன்றி.

பூங்குழலி

# காதலைப் புரிந்து கொள்வோம் 4



காதலில் ஈர்க்கப்படுவதற்கு தோற்றம் ஓர் அடிப்படையாக உள்ளது என்பது உண்மை என்ற போதிலும் அப்படி நாம் கற்பனை செய்து வைத்தத் தோற்றத்திற்கு சற்றும் பொருந்தாத ஒருவர் மீதும் கூட ஈர்ப்பும் காதலும் வருவது எதனால்?

கடந்த இரு வாரங்களாக காதலை ஆண்-பெண் மனநிலை சார்ந்து புரிந்து கொள்ள முயன்றோம். உளவியல் விளக்கங்கள் ஒரு புறம் இருக்க, இத்தொடரின் முதல் வாரத்தில் குறிப்பிட்டதைப் போல ஆண்-பெண் உறவில் நம் உடலில் ஏற்படும் இரசாயன மாற்றங்கள், சுரப்பிகள் ஆகியவை மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன.

டோபாமைன் எனும் சுரப்பி குறித்து கடந்த இதழ்களில் விரிவாக பார்த்தோம். டோபாமைன் தவிரவும் பெரோமோன்ஸ் (*Pheromones*), ஆக்சிடோசின் (*Oxytocin*), டெஸ்டோஸ்டெரோன் (*Testosterone*) போன்று காதலில் பங்காற்றும் வேறு சில சுரப்பிகளும் உள்ளன. இவற்றில் பெரோமோன்ஸ் குறிப்பிட்ட நபர் மீது நமக்கு ஈர்ப்பு ஏற்படுவதில் முக்கிய பங்காற்றுகிறது.

"கண்டதும் காதல்" என்பது உலகம் முழுவதும் பேசப்படுகிற, ஆனால் இன்னமும் புரிந்து கொள்ளப்படாத ஒன்றாக உள்ளது. கண்டதும் காதல் வருமோ இல்லையோ நுகர்ந்ததும் காதல் வர வாய்ப்பு உள்ளது என்கிறது காதல் அறிவியல்.

ஒருவரைக் கண்டவுடன் நம்மை அறியாமல் நமக்குள் ஏற்படும் மாற்றங்கள், தன்னிச்சையான வெளிப்பாடுகள் ஆகியவை நமது உடலின் எதிர்ப்பு சக்தியுடன் தொடர்புடையது என்கிறது அறிவியல். மனித இனத்தைச் சேர்ந்தவர்களாக நாம் பல்வேறுபட்ட மரபணு கட்டமைப்புகளைக் கொண்டவர்களாக இருக்கிறோம். அனைவரும் ஒரே மாதிரியான மரபணு கட்டமைப்பினைக் கொண்டிருந்தால் ஒரே ஒரு நோய் தாக்கி மொத்த மனித இனமே அழியக்கூடும். மிருகங்களும் பூச்சிகளும் தங்கள் இனம் அல்லாத ஒன்றை அறிய பெரோமோன்களையும் அது எதிர்ப்பு சக்தியில் ஏற்படுத்தும் மாற்றங்களையும் பயன்படுத்துகின்றன. பொதுவாக மிருகங்கள் தங்கள் துணையை வாசத்தை வைத்தே அடையாளம் காண்கின்றன என்று நாம் படித்திருப்போம். அதற்கு காரணமாக இருப்பது இந்த பெரோமோன்களே.

பெரோமோன்கள் என்பது நம் உடலில் இருந்து இயற்கையாக வெளிப்படும் வாசம் ஆகும். இந்த வாசமே நாம் ஒருவர் மீது பாலியல் ரீதியாக ஆர்வம் கொண்டிருக்கிறோமா இல்லையா என்பதை தீர்மானிக்கக் கூடியதாக உள்ளது. ஒருவரின் வாசம் நமக்கு பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தும் அதே நேரம் உங்கள் நண்பருக்கு வெறுப்பைத் தரலாம்.

இதற்கு காரணம் உங்கள் நண்பரின் நோய் எதிர்ப்பு சக்தி உங்களுடைய திலிருந்து மாறுபட்டு இருக்கலாம். இருவரும் இரத்தமும் வெவ்வேறு பிரிவாக இருக்கலாம். சில சுரப்பிகள் சுரக்கும் தன்மை மாறுபடலாம். இவை நாமும் நமது நண்பரும் ஒத்த சிந்தனை உடையவர்களாக இருந்த போதும் உடலளவில் மிகவும் மாறுபட்டவர்களே. நம் சகோதரர்களாக இருந்தாலும் அவர்களும் உடலளவில் நம்மிலிருந்து மிகவும் மாறுபட்டவர்களே. அதன் காரணமாகவே நமக்கு பிடித்த ஒருவர், நம்மை ஈர்க்கும் ஒருவர் அவர்களுக்கு பிடிக்காமல் போகலாம்.

இதற்கு பாரிய இழையம் ஒப்புமை தன்மை (*Major Histocompatibility complex - MHC*) என்று வழங்கப்படும் நம் உடலின் இரத்த அணுக்கள் மீது படிந்துள்ள ஒரு வித மரபணு புரத பூச்சே காரணம். இதுவே நம் உடலுக்கு ஒவ்வாத பொருட்களை கண்டறிகிறது. *Histo* ஹிஸ்டோ என்ற கிரேக்க சொல்லின் பொருள் இழையம் *Tissue* என்பதாகும். உடல் உறுப்புகள் மாற்று சிகிச்சைகளின் போது, இரத்தப் பிரிவின் பொருத்தத்துடன் இவற்றின் பொருத்தபாடே பார்க்கப்படுகின்றன.

இந்த எம். எச். சி. எனப்படுபவை வியர்வை, உடல் நாற்றம், எச்சில் போன்றவற்றின் மூலம் வெளிப்படுகிறது. இந்த எம். எச். சி. பல வகைப்படுகிறது. நெருங்கிய உறவினர்களிடையே அது ஏறத்தாழ ஒரே மாதிரியாக உள்ளது.

பிறரின் எம். எச். சி அளவை அவர்களிடமிருந்து வெளிப்படும் மிக மெல்லிய இயற்கையான வாடை மூலமாக நமது உடல் அறிகிறது. இந்த வாடையை நாம் பட்டவர்த்தனமாக உணர்வதில்லை. பொதுவாக பிறர் பயன்படுத்தும் சோப், வாசனை திரவியங்கள் இவற்றின் வாசத்தையே நாம் வெளிப்படையாக உணர்கிறோம். ஆனால் நமது உடல் இந்த மெல்லிய இயற்கை வாடையை உணரும் தன்மை வாய்ந்தது. சிறு குழந்தைகள், அம்மாவின் சேலையில் பாதுகாப்பை உணர்வது அச்சேலையில் படிந்துள்ள இவ்வாசத்தினால் தான். சில குழந்தைகள் சில துணிகளை முகர்ந்து, "இது அப்பா பயன்படுத்திய துண்டு" என்று சரியாகச் சொல்வதை நாம் பார்த்திருக்கலாம். காலம் காலமாக காதலியின் கைக்குட்டைகளை காதலன்கள் பொத்தி வைத்து பாதுகாப்பதும், காதலனின் சட்டையை அணிவதில் காதலிகள் பரவசமடைவதும் இதனால்தான்.

இதில் மிக முக்கியமாக நாம் அறிய வேண்டிய செய்தி என்னவெனில், உறவினர்களிடையே எம். எச். சி அளவு ஏறத்தாழ ஒரே மாதிரியாக உள்ளது என்பதும், எம். எச். சி அளவு எவ்வளவுக்கெவ்வளவு வேறுபடுகிறதோ அந்த அளவு ஈர்ப்பு இருக்கும் என்பதையும்தான்.

**ஈஸ்ட்ரோஜின் மற்றும் டெஸ்டோஸ் டெரோன் சுரப்பிகள் உடலில் ஏற்படுத்தும் கிளர்ச்சியான மாற்றங்களை கையாளும் பக்குவமற்ற நிலையில் பாலியல் ஈர்ப்பு பல தவறான செயல்களுக்கு இட்டுச் சென்று விடுகிறது. அவ்வயதில் ஏற்படும் பாலியல் ஈர்ப்பே காதல் என்றும் தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது.**

**ஆக இயற்கையான ஈர்ப்பு என்பது உறவுகளிடம், அதாவது அத்தை பிள்ளைகள், மாமன் பிள்ளைகள், தாய் மாமன் போன்றோரிடம் ஏற்பட வாய்ப்பே இல்லை. இது மரபணு பூச்சு என்ற அடிப்படையில், ஒரே ஜாதியை சேர்ந்தவர்களிடமும் எம். எச். சி அளவு பெரிதாக வேறுபட வாய்ப்பில்லை. எனவே ஒரே ஜாதிக்குள்ளும் இயற்கையான ஈர்ப்பு ஏற்படும் வாய்ப்புக் குறைவு.**

அமெரிக்காவில் இது குறித்து நடத்தப் பட்ட ஓர் ஆய்வில், சில பெண்கள் முன் சில ஆண்களின் துவைக்கப்படாத, அவர்களின் வியர்வை வாடை வரும் சட்டைகள் போடப் பட்டன. அதிலிருந்து அப்பெண்கள் தங்களுக்கு மிகவும் "ஈர்க்கக் கூடிய" சட்டையைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டனர். இந்த ஆய்வின் முடிவில், ஒவ்வொரு பெண்ணும் தங்களின் எம். எச். சி அளவிலிருந்தும் மிக அதிகமாக மாறுபட்டிருந்த ஓர் ஆணின் சட்டையையே தேர்ந்தெடுத் துள்ளார் என்பது தெரிய வந்தது.

ஆக இயற்கையான ஈர்ப்பு என்பது உறவுகளிடம், அதாவது அத்தை பிள்ளைகள், மாமன் பிள்ளைகள், தாய் மாமன் போன்றோரிடம் ஏற்பட வாய்ப்பே இல்லை. இது மரபணு பூச்சு என்ற அடிப்படையில், ஒரே ஜாதியை சேர்ந்தவர்களிடமும் எம். எச். சி அளவு பெரிதாக வேறுபட வாய்ப்பில்லை. எனவே ஒரே ஜாதிக்குள்ளும் இயற்கையான ஈர்ப்பு ஏற்படும் வாய்ப்புக் குறைவு.

அப்படி ஏற்படும் ஈர்ப்பு என்பது காலம் காலமாக நம் மூளையில் திணிக்கப்பட்ட செயற்கையான காரணங்களால் ஏற்படும் ஈர்ப்பே அன்றி இயற்கையானது அல்ல.

மேலும், நமது வருங்கால துணையின் தோற்றம் குறித்து நமக்கு பல்வேறு கற்பனைகள் இருந்த போதும், அதற்கு சிறிதும் தொடர்பற்ற ஒருவர் மீது நமக்கு ஈர்ப்பு ஏற்படுவதற்கு இந்த எம். எச். சி அளவும் ஒரு காரணமாகிறது.

இந்த பெரோமோன்கள், எம். எச். சி அளவு, தோற்றம் குறித்த நமது எதிர்பார்ப்புகள், நம் மனதில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் காதல் மற்றும் எதிர் பாலினம் பற்றிய படிமங்கள் ஆகிய அனைத்தும் நாம் நம் துணையைத் தேர்ந்தெடுக்கும் தொடக்கக் காலத்தில் பங்காற்றுகின்றன. குறிப்பாக கூற வேண்டு மெனில் பாலியல் ரீதியான ஈர்ப்புக்கு இவை அடிப்படையாக விளங்குகின்றன. பாலியல் ரீதியான ஈர்ப்பு இல்லாமல் நமக்குரிய அந்த சிறப்பான ஒருவரை நாம் காண முடியாது என்பது எவ்வளவு

உண்மையோ அதே அளவு உண்மை பாலியல் ரீதியான ஈர்ப்பு மட்டுமே ஒரு காதல் உறவை நீண்ட காலம் கொண்டு செல்லாது என்பதும். பாலியல் துறை ஆய்வறிஞர் ஜான் மணி அவர்கள் காதலுக்கும் பாலியல் ஈர்ப்புக்கு இடையிலான வேறுபாட்டை இவ்வாறு விவரிக்கிறார். "காதல் என்பது கவித்துவமானது. உணர்ச்சிகரமானது. பாலியல் ஈர்ப்பு என்பது ஆபாசமானது. மேலோட்டமானது" என்கிறார் அவர்.

பாலியல் ஈர்ப்பே காதலின் தொடக்கப் புள்ளி. ஆனால் பாலியல் ரீதியாக ஈர்ப்பு ஏற்பட்ட அனைவரிடமும் நீண்ட கால உறவை எதிர்பார்க்க இயலாது. குறிப்பாக பருவமடையும் வயதில் நம் உடலில் ஈஸ்ட்ரோஜின் மற்றும் டெஸ்டோஸ்டெரோன் ஆகியவை சுரப்பது அதிகரிக்கிறது. இந்த சுரப்பிகளே பாலியல் உணர்வைத் தூண்டும் சுரப்பிகள். அதனால் இக்காலக்கட்டத்தில் பலர் மீதும் பாலியல் ரீதியான ஈர்ப்பு ஏற்படுவது இயற்கையானது. பின்னரும் இந்த சுரப்பிகள் சுரந்தாலும் அதை கையாளும் பக்குவம் நமக்கு வந்து விடலாம். ஆனால் பதின் வயதுகளில், புதிதாக சுரக்கும் அந்த சுரப்பி உடலில் ஏற்படுத்தும் கிளர்ச்சியான மாற்றங்களை கையாளும் பக்குவமற்ற நிலையில் பாலியல் ஈர்ப்பு பல தவறான செயல்களுக்கு இட்டுச் சென்று விடுகிறது. அவ்வயதில் ஏற்படும் பாலியல் ஈர்ப்பே காதல் என்றும் தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது.

அதனால்தான் அந்த வயதில் ஆண், பெண்களை கையாள்வது பெற்றோர்களுக்கு சிக்கலாக உள்ளது. நம் பள்ளிகளில் இதை பற்றிய தெளிவினை நாம் தருவதில்லை. பெற்றோர் களுக்கும் இதைப் பற்றிய தெளிவில்லை. அப்படியே அறிந்திருந்தாலும் பிள்ளைகளிடம் இவற்றைப் பற்றிப் பேச தயங்குகின்றனர். ஒரு வேளை பிள்ளைகள் யார் மீதாவது ஈர்க்கப் பட்டதாக தெரிந்தால், பதட்டப்பட்டு, கோபப் பட்டு, அதை தவறாக கையாள்கின்றனர். இதனால் அக்குழந்தைகளை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்குகின்றனர்.

சிறு வயது முதல் நன்மை தீமைகளை நேரடியாக குழந்தைகளுக்கு புரியும் வண்ணம் சொல்லி கொடுக்கும் பெற்றோர்களுக்கு பதின் வயதில் மட்டும் சொல்லிக் கொடுப்பதில் தயக்கம் ஏன்? தங்கள் குழந்தைகளின் முதல் நண்பர்களாக, அவர்களிடம் பகிரும் போது, அதை புரிந்து கொள்ளும் தன்மை குழந்தைகளுக்கு நிச்சயம் உள்ளது. பொதுவாக குழந்தைகள் தங்கள் பெற்றோரிடம் அனைத்தையும் பகிர்ந்து கொள்ளவே முற்படுகின்றனர். ஆனால் சரியான

> **பதின் வயதுகளில் தாங்கள் செய்வது அனைத்தும் சரி என்று கருதிக் கொண்டு, தங்களின் கருத்து ஏற்கப்பட வேண்டும் என்ற பிடிவாதம் அதிகரிக்கும் வயதில், உடலியல் ரீதியாக ஏற்படும் மாற்றங்களை புரிந்து கொள்ளவும் முடியாமல், பகிர்ந்து கொள்ளவும் முடியாமல் அக்குழந்தைகள் தவிக்கும் வயதில், பெற்றோரும் கண்டிப்புடன் நடக்கிறோம் என்ற பெயரில் குழந்தைகளிடம் இருந்து அந்நியப்பட்டுப் போகின்றனர்.**

காரணம் சொல்லப்படாமல் கோபம் மட்டும் காட்டப்படும் போது, சொல்வதை விடுத்து, பெற்றோர்களுக்கு மறைத்து செயல்பட தொடங்குகின்றனர்.

எனவே கண்டிப்பது என்பதை விட, குழந்தையிலிருந்தே புரிந்து ஏற்றுக் கொள்ள வைப்பதே குழந்தைகளை கையாளும் சரியான வழியாகும். அதிலும் பதின் வயதுகளில் தாங்கள் செய்வது அனைத்தும் சரி என்று கருதிக் கொண்டு, தங்களின் கருத்து ஏற்கப்பட வேண்டும் என்ற பிடிவாதம் அதிகரிக்கும் வயதில், உடலியல் ரீதியாக ஏற்படும் மாற்றங்களை புரிந்து கொள்ளவும் முடியாமல், பகிர்ந்து கொள்ளவும் முடியாமல் அக்குழந்தைகள் தவிக்கும் வயதில், பெற்றோரும் கண்டிப்புடன் நடக்கிறோம் என்ற பெயரில் குழந்தைகளிடம் இருந்து அந்நியப்பட்டுப் போகின்றனர். அதனாலேயே பதின் வயது குழந்தைகள் தங்களை தனிமைப் படுத்திக் கொள்கின்றனர். இதுவே பெரும் உளவியல் மற்றும் நடைமுறை சிக்கல்களுக்கு இட்டுச் செல்கிறது. இதனை பெற்றோர் உணர்ந்து தங்கள் குழந்தைகளின் உற்ற நண்பர்களாக செயல்பட வேண்டும்.

பாலியல் ஈர்ப்பு இன்றி காதல் இல்லை எனும் போது, வெறும் பாலியல் ஈர்ப்புக்கும் அதை கடந்த காதலுக்குமான வேறுபாட்டை எவ்வாறு உணர்வது?

வரும் இதழ்களில்...


## வாழ்க்கைத் துணைவி தேவை

25 அகவை நிரம்பிய, கப்பற்பொறியாளராகப் (*MARINE ENGINEER*) பணியாற்றிவரும் முற்போக்குச் சிந்தனையுள்ள, சாதி நம்பிக்கையற்ற, அமைதியான, மனமுதிர்ச்சியுடைய, எவ்விதத்தீய பழக்கங்களுமற்ற மணமகனுக்குத் தக்க மணமகள் தேவை.

தொடர்புக்கு.... அறிவுச்செல்வன்

97904 78781 , 95787 03311

7

# சுயமரியாதை வாழ்வு

அரசூர் அ.ப.சிவா

"இளரத்தம் அதான் சாமி இல்லையின்னு சொல்லிட்டு திரியுறான் எல்லாம் கால்கட்டு போட்டா சரியாயிடும்"

சமூகத்தில் ஒருவரின் கொள்கைப் பிடிப்பைத் தீர்மானிக்கும் சக்தியாக இங்கு திருமணம் சொல்லப்பட்டு வருகிறது. பெரியாரியலை ஏற்றுக் கொண்ட அனைவரின் குடும்பத்திலும் திருமணம் சில அதிர்வுகளை ஏற்படுத்தியே தீரும்.

"சாமி இல்லயின்னாக்கூடப் பராவாயில்லை சாதி இல்லையிங்கறானே??" இதுதான் பல பெற்றோரின் ஆதங்கமாக இருக்கும். ஆணுக்கும் பெண்ணுக்குமான இன்ப வாழ்வின் அடிப்படையே திருமணம் என்பதைத் தாண்டி ஆயிரங்காலத்து பயிர், சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவது என பல வடிவங்களில் தவறாகவே கற்பிக்கப்பட்டு வருகிறது.

செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சு (உடன் போக்கில்) கலந்த முப்பாட்டனும் முப்பாட்டியும் இன்றைய சமூக மணவிழாவைப் பார்த்தால் மிகப்பிற்போக்கு என எள்ளி நகையாடலாம் பண்பாடு கலாச்சாரம் காப்பாற்றும் மதவாதிகளின் கையில் சிக்கி நமக்கே எதிராகப் போய் விட்டது மணமுறை.

தான் பார்த்து பழகிய, ஒரு துணையை தேர்ந்தெடுக்கும் உரிமை என்பது இயல்பான ஒன்று. அப்படி இணைகிற இருவர் அச்செய்தியை உலகிற்கு அறிவிக்க சொல்லப்படுகிற முறை அவ்விருவரின் இயல்பான ஆசைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதே அறிவான செயலாக இருக்க முடியும்.

இக்கோடை விடுமுறை நாட்களில் இரண்டு நாட்கள் மேற்கூறியவாறு 2 இணையர்கள் தங்கள் விரும்பியபடி வாழ்வில் இணைய உள்ளனர்.

முதலில் மே 17 பொள்ளாச்சி- கிணத்துகடவில் திராவிடர் விடுதலைக் கழக ஜாதி ஒழிப்பு பிரச்சார பயண மேடையில் தோழர்கள் நிர்மல் - இசைமதி இணைய உள்ளனர். இருவருமே இயக்கத் தோழர்கள்

அது 2010 ம் வருடம் ஜூலை மாதம் 4 ம் தேதி பெரியார் திராவிடர் கழகத்தின் சூலூர் ஒன்றிய பயிற்சி வகுப்பின் இறுதி நாள், தெளிவாகவும் ஆழமாகவும் ஓர் உறுதி மொழியைச் சொன்னார் ஓர் இளம் தோழர். அவ்வுறுதிமொழி செயல் வடிவமாகும் நாள் 17.05.2015. ஆம் அவர்தான் தோழர் வே.நிர்மல் குமார் அன்று அவர் கூறியது "நான் பிற்படுத்தப் பட்ட சமூகத்தைச் சேர்ந்தவன் எங்களின் வீடுகளுக்குள் ஒரு தாழ்த்தப் பட்டவர்கள் நுழைய முடியாதாம். ஆகவே நான் உறுதியாக ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்ததாகச் சொல்லும் பெண்ணையே திருமணம் செய்வேன்"

தோழர் இசைமதி. பெரியாரியலை ஏற்றுக் கொண்டிருக்கிற, நடைமுறைப் படுத்துகிற பெண்களில் இவரும் ஒருவர். இசை ஆசிரியர், பாடகி, மேடைகளில் பெரியாரிய பாடல்களை பாடுகிற தோழர்.. நல் வாய்ப்பாக இவர்கள் இருவரும் சந்திக்க, சொல்லில் இருந்த உறுதி நிர்மல்-இசைமதி செயலிலும் இருந்தது. கொள்கையால் ஒத்துப்போன தோழர்கள் இருவர் வாழ்வில் இணைகிறார்கள் மே 17 இல் .

அடுத்தது மே 22 இல் நடைபெற இருக்கிற தோழர்கள் அன்புமணி - முத்துராஜா திருமணம், அன்புமணியின் அம்மா கௌரி பெரியார்-மணியம்மையாரால் திருச்சி இல்லத்தில் வளர்க்கப்பட்டவர். அப்பா ஜோதிவேலு பெரியார் தொண்டர். 1982 ல் மாயவரம் (மயிலாடுதுறை) பார்ப்பனர் ஆதிக்க எதிப்பு மாநாட்டு மேடையில் இவர்கள் திருமணம் நடைபெற்றது.

கௌரி - ஜோதிவேலு இணையர்களுக்கு 3மகள்கள் பெரியார்செல்வி, திராவிடராணி, அன்புமணி, மூத்தவர் பெரியார்செல்வி என்னுடைய துணைவியார். எங்களின் ஜாதி மறுப்பு சுயமரியாதைத் திருமணம் 2010 ல் நடைப்பெற்றது. இப்போது உடன் பணிபுரிகிற முத்துராஜா அன்புமணி காதல்.

நல் வாய்ப்பாய் முத்துராஜா அவர்கள் அன்புமணியின் அப்பா, அம்மா இருவரின் சமூகத்தையும் சாராது வேறு சமூகத்தை சார்ந்தவர். காதல் என்பது

திருமணமாக வடிவம் பெறும்போது வழக்கமாக வருகிற நடைமுறைச் சிக்கல்கள் தான் அன்புமணிக்கும் நேர்ந்தது மணமகன் வீட்டில் எங்களுக்கு எல்லாம் சரி ஆனா அந்த தாலியும் மட்டும் என இழுக்க. “சரி கட்டிக்கலாம். அப்புறம் கழட்டி வெச்சுக்கலாம்” என்றவாறு எவ்வித சமரசமும் இல்லாமல் எல்லோரும் எதிர்பார்க்காத நேரத்தில் “அப்படினா வேற பொண்ணு பார்த்துக்குங்க” என்றார் அன்புமணி.

எனக்கு உங்க கொள்கையெல்லாம் தெரியாது, ஆனா எளிமையா பதிவுத் திருமணம் செய்யவேண்டும் என்பது என் விருப்பம் என மணமகன் முத்துராஜா சொல்ல, எளிமையாய் மே 22 ல் பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திருமணம் நடைபெறவுள்ளது

அன்பான உறவுகளே.. திருமண முறைக்கு பழமையைத் தேடி அலைய வேண்டியதில்லை, அக்காலத் திருமண முறையே இக்காலத்திற்கும் பொருந்துமென்றால் நமக்கு அறிவு வளரவேண்டியதில்லை என்று தானே அர்த்தம் என்பார் பெரியார்.

இந்த இரண்டு திருமணத்திலேயும் யாருக்கு இழப்பு என்று பார்த்தால் மந்திரம் சொல்லி பிழைக்கும் பார்ப்பனர்களுக்குத்தான் இழப்பு. அவர்கள் பிழைப்புப் பறிபோகிறது என்பதால் தான் மதவாதிகளும் அதை வைத்து அரசியல் செய்பவர்களும் தாலியைப் பிடித்துத் தொங்குகிறார்கள்.

திருமணமாகாத இயக்கத்தோழர்களுக்கு இதிலிருந்து சொல்லிக்கொள்வது என்னவென்றால் நடைமுறையில் இயல்பாய் இருங்கள். காதலியுங்கள். கொள்கையில் உறுதியாய் இருங்கள்.

பொள்ளாச்சி அஞ்சலகத் துணை அலுவலராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற நண்பர் திரு.சோமசுந்தரம் அவர்கள் காட்டாறு ஏட்டிற்காக ரூ 100.00 நன்கொடை வழங்கினார். மிக்க நன்றி.

**வரலாறு**

வடஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி அருகே உதயேந்திரம் என்ற கிராமத்தில் மரங்களை ஏலம் விடும் ஏலநிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. ஏலத்தில் கிறிஸ்தவப் பறையர்கள் சிலர் கலந்துகொண்டனர். ஏலத்திற்காக போடப்பட்ட பெஞ்சுகளில் அவர்கள் அமர்ந்து விட்டனர். ஏலம் நடத்தும் கர்ணம் ஒரு அய்யங்கார். உடனே அவர், அமர்ந்திருந்த தலித்துகளை விரட்டிவிட்டு, அவர்கள் அமர்ந்த பெஞ்சையும் தூக்கி வீசிவிட்டார். 11.05.1927 இக்கொடுமை நிகழ்ந்தது. சுயமரியாதை இயக்கத்தின் முயற்சியால் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, அந்த இயக்கத்தின் வழக்கறிஞர் ஞானப்பிரகாசம் என்பவரால் வழக்கு நடத்தப்பட்டு பார்ப்பனருக்கு தண்டனை வாங்கித்தரப்பட்டது. குடி அரசு 14.10.1928

# விடியாத பொழுதுகள்

பள்ளிபாளையம் இரமேசு

துரோகம் செய்யும்
ஜனனம் வேண்டாம்,
தியாகம் செய்யும்
மரணம் வேண்டும்.

முதுகில் குத்தும்
வெற்றி வேண்டாம்,
முகத்துக்கு முன்னால்
தோல்வி வேண்டும்

பொறுத்துக் கொள்ளும்
சாமான்யன் வேண்டாம்,
பொங்கி எழும்
சண்டியர் வேண்டும்.

எந்திரமாக்கும்
கல்வி வேண்டாம்,
மாற்றுச் சிந்தனைப்
பள்ளி வேண்டும்.

அள்ளிக் கொடுக்கும்
அல்லல் வேண்டாம்,
கிள்ளிக் கொடுத்தாலும்
வள்ளல் வேண்டும்.

எண்ணிப் பார்க்கும்
நாணயம் வேண்டாம்,
நம்பிக்கை
நாணயம் வேண்டும்.

நண்பரெல்லாம்
எதிரியாக வேண்டாம்
எதிரியெல்லாம்
நண்பராக வேண்டும்

தாலி என்னும்
போலி வேண்டாம்,
அன்பு என்னும்
வேலி போதும்.

இணைந்திருந்து
மோதல் வேண்டாம்,
புரிந்து
பிரிந்து செல்லும்
காதல் வேண்டும்.

ஜாதி, மதத்
தேள்கொட்ட வேண்டாம்,
சமத்துவமெனும்
பால்கொட்ட வேண்டும்.

தமிழில்:
பிரபாகரன் அழகர்சாமி

2

# உத்திரப்பிரதேச அதிகார மய்யங்களின் பார்ப்பன ஆதிக்கம்

## 3.அலகாபாத்தில் ஜாதியும் பொதுநிறுவனங்களும்

### 3.1 கணக்கெடுப்பு

இந்தப்பிரச்சனைகள் குறித்து இன்னும் நெருக்கமான ஆய்வினை மேற்கொள்ளவேண்டும் என்று நினைத்தோம். அலகாபாத்தில் உள்ள அரசு நிறுவனங்கள் மற்றும் பொதுஅமைப்புகளில் அதிகாரத்தில் இருப்பவர்களின் ஜாதிய- சமூகப் பின்னணி குறித்த ஒரு கணக்கெடுப்பினை 2012 ஆம் ஆண்டு ஜூன் - ஆகஸ்ட் காலக்கட்டத்தில் நடத்தினோம். அதிகாரமும் செல்வாக்கும்மிக்க இடங்களில் இருப்பவர்களின் பெயர்ப் பட்டியலைச் சேகரிக்கத் தொடங்கினோம். பல்வேறு வலைத்தளங்களில் இருந்தும், பல நிறுவனங்களின் அதிகாரிகள் / பணியாளர்களின் பெயர்ப்பட்டியல், அலகாபாத் பத்திரிக்கையாளர் சங்கம் வெளியிட்டுள்ள முக்கியமானவர்களின் தொடர்பு விவரங்கள் அடங்கிய புத்தகம் உள்ளிட்ட பல இடங்களில் இருந்தும் சேகரித்து பெயர்ப்பட்டியலைத் தயாரித்தோம்.

ஆய்வுக்காக எடுத்துக்கொண்ட நிறுவனங்கள் / அமைப்புகள்: கல்விநிறுவனங்கள் (எ.கா: அலகாபாத் பல்கலைக்கழகம், அலகாபாத்தில் அமைந்துள்ள இந்தியத் தகவல்தொழில்நுட்ப நிறுவனம்), நிர்வாக அமைப்புகள் (எ.கா: மாவட்டஆட்சி நிர்வாகம், உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம்), நீதித்துறை (எ.கா: அலகாபாத் உயர்நீதிமன்றம்), தொழிற்சங்கங்கள் மற்றும் அரசு சாராஅமைப்புகள் (NGO). ஒப்பிடுவதற்காக, உடலுழைப்பு சார்ந்த பணியில் ஈடுபட்டுள்ள ரிக்சாஓட்டுபவர்கள் பற்றிய தகவல்களும் சேகரிக்கப்பட்டது.

மொத்தம் 1852 பெயர்கள் சேகரிக்கப் பட்டது. அதில் ஆண்கள் மிகப்பெரும்பான்மை யானவர்களாக இருந்தது, அலகாபாத் எந்த அளவிற்கு அதிக ஆணாதிக்க சமூகமாக இருக்கிறது என்பதைக் காட்டக்கூடியதாக இருக்கிறது. அடுத்த வேலையாக, சேகரிக்கப்பட்ட அந்தப் பெயர்களைக் கொண்டு (சரியாகச் சொன்னால் பெயருக்குப் பின்னால் இருக்கும் பட்டப்பெயரைக்கொண்டு), முடிந்தளவிற்கு துல்லியமாக அவருடைய ஜாதி என்ன என்பதை யூகிக்கத் தொடங்கினோம். சில பெயர்களுக்கு இது மிகஎளிதான வேலையாக இருந்தது.

உதாரணத்திற்கு, அலகாபாத்தில் ‘ஸ்ரீவஸ்தவா’ என்கிற பட்டப்பெயரைக் கொண்டிருப்பவர் மிகப்பெரும்பாலும் கயஸ்தா என்னும் ஜாதியைச் சேர்ந்தவராகத்தான் இருப்பார் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒருவிதமான பொதுஅறிவு என்றே சொல்லலாம். சிலருடைய பெயர்களை வைத்து, அவ்வளவு எளிதாக அவர் என்ன ஜாதி என்பதை உடனே தெரிந்து கொள்ள முடியாவிட்டாலும், சில ஆய்வாளர்களின் தரவுகள் மற்றும் இது குறித்து விவரம் அறிந்தவர்களின் உதவியுடன் அதைத் தெரிந்து கொள்ளமுடிகிறது.

உதாரணத்திற்கு, ஜோரி என்கிற பட்டப்பெயரை, உத்திரபிரதேசத்தின் கிழக்குப் பகுதிகளில் கயஸ்தா ஜாதியினரே பயன்படுத்து கின்றனர். இது வெறும் தோராயமான யூகமாக மட்டுமே அமைந்து விடக்கூடாது என்பதற்காக, எவ்வளவு அதிகமான தரவுகளையும் உதவிகளையும் பெறமுடியுமோ அவ்வளவையும் பெற்று இந்த வேலையைச் செய்து முடித்தோம்.

இறுதியில், 1852 பெயர்களில் 325 பெயர்களை எந்தவொரு ஜாதி அல்லது சமூகப் பின்னணியுடனும் தொடர்புப்படுத்த முடியவில்லை. உதாரணத்திற்கு “சஞ்சய்குமார்” போன்ற பெயர்களை எந்தவொரு குறிபிட்ட ஜாதியுடனும் தொடர்புடையவை அல்ல. அதிலும் நேரடித் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பிருந்த மிகச்சிலரிடம் நேரடியாகக் கேட்டுத் தெரிந்துக்கொண்டிருக்கிறோம். கடைசியாக எஞ்சியிருந்த பெயர்களைச் சமூகப்பின்னணி “தெரிந்துகொள்ளப்படாத இந்துக்கள்” என்று வகைப்படுத்திக் கொண்டோம்.

### 3.2 கணக்கெடுப்பின் மூலம் கண்டறிந்தவை

இந்த கணக்கெடுப்பின்படி, அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களில் உயர்ஜாதியினர் என்று அடையாளம் காணப்பட்டவர்கள் கொண்டிருக்கும் பங்கு, அட்டவணை- 3 இல் கொடுக்கப்பட்டுள்ளது. உயர்ஜாதியினர் கொண்டிருக்கும் பங்கு இரண்டு வகையாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது: 1) அந்தக் குறிப்பிட்ட பதவியில் இருப்பவர்களின் “மொத்த எண்ணிக்கையில்” உயர்ஜாதியினர் பெற்றிருக்கும்

*இடங்களின் சதவிகிதம். 2) ஜாதி 'அடையாளம் காணப்பட்டவர்களில்' உயர்ஜாதியினர் பெற்றிருக்கும் இடங்களின் சதவிகிதம். அதுபோலவே, உயர்ஜாதியினரில் மிகக்குறிப்பாக பார்ப்பனர்கள் மற்றும் கயஸ்தா என்ற இரண்டு பிரிவினர்கள் பெற்றிருக்கும் பங்கும் கணக்கிடப்பட்டுள்ளது.*

அட்டவணை-3: அலகாபாத்தில், அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களில் உயர்ஜாதியினர் பெற்றிருக்கும் பங்கு *(%)*

| | உயர் ஜாதியினர் | | பார்ப்பனர் - கயஸ்தா | |
|---|---|---|---|---|
| | மொத்த எண்ணிக்கை | அடையாளம் காணப் பட்டவர்கள் | மொத்த எண்ணிக்கை | அடையாளம் காணப் பட்டவர்கள் |
| ஆசிரியர் சங்கங்களின் தலைவர்கள் (17) | 100 | 100 | 76 | 76 |
| அலகாபாத் பத்திரிக்கையாளர் சங்கப் பொறுப்பாளர்கள் (16) | 100 | 100 | 75 | 75 |
| விளம்பர நிறுவனங்களின் உரிமையாளர்கள் (11) | 91 | 91 | 55 | 55 |
| மருத்துவர்கள் (99) | 89 | 94 | 37 | 39 |
| பார் அசோசியேசன் (28) | 86 | 96 | 68 | 76 |
| முன்னணி பதிப்பாளர்கள் (12) | 83 | 100 | 42 | 50 |
| ஜி.பி.பான்ட் சமூக அறிவியல் நிறுவனப் பேராசிரியர்கள் (15) | 80 | 80 | 60 | 67 |
| வழக்கறிஞர் சங்கச் செயற்குழு உறுப்பினர்கள் (14) | 79 | 100 | 57 | 73 |
| அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் (30) | 77 | 88 | 47 | 54 |
| தொழிற்சங்கத் தலைவர்கள் (எழுத்துபணி - உடலுழைப்புத் தொழிலாளர்கள்) (49) | 76 | 88 | 55 | 64 |
| அலகாபாத் பல்கலைக்கழகப் பேராசிரியர்களில் ஒருதொகுதி (112) | 76 | 77 | 54 | 55 |
| அலகாபாத் மாவட்ட நிர்வாக அதிகாரிகள் (20) | 75 | 88 | 40 | 53 |
| ஊடக நிறுவனங்களின் செய்தியாளர்கள் (62) | 74 | 85 | 53 | 61 |
| அசோக்நகர் பகுதிவாழ் மக்கள் (62) | 74 | 82 | 32 | 36 |
| அலகாபாத் பல்கலைக்கழக மாணவர் சங்க முன்னாள் தலைவர்கள் (79) | 73 | 89 | 44 | 54 |
| முன்னணிக் கலைஞர்கள் (55) | 71 | 89 | 47 | 59 |
| அலகாபாத் பத்திரிக்கையாளர் சங்க உறுப்பினர்கள் (104) | 71 | 80 | 56 | 63 |
| காவல் துறை உயர் அதிகாரிகள் (28) | 68 | 100 | 39 | 58 |

அ) அந்தந்தப் பதவியில் இடம் பெற்றிருப்பவர்களின் எண்ணிக்கை அடைப்புக்குறிக்குள் கொடுக்கப் பட்டிருக்கிறது

ஆ) உயர்ஜாதியினர் பெற்றிருக்கும் பங்கு சதவிகித அளவில் கொடுக்கப்பட்டிருக்கிறது

மொத்த எண்ணிக்கையில் உயர்ஜாதியினர் பெற்றிருக்கும் இடங்களின் சதவிகிதத்தின்படி இந்த அட்டவணை வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது கணக்கெடுப்பிற்கு எடுத்துக்கொண்ட பதவிகளில், அதிகப்பட்சமாக, ஆசிரியர் சங்கங்களின் தலைவர்கள் 100 சதவிகிதமும் உயர்ஜாதியினரே. குறைந்த பட்சமாக, அலகாபாத் மாநகராட்சியின் இளநிலைப் பொறியாளர்களில் 55 சதவிகிதம் உயர்ஜாதியினர். அட்டவணையின் கடைசி வரிசையில் கொடுக்கப்பட்டிருக்கும் மொத்த எண்ணிக்கையின்படி பார்த்தால், அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களில் 75 சதவிகிதத்தை, மக்கள் தொகையில் 21 சதவிகிதம் உள்ள உயர் ஜாதியினர் கைபற்றியிருக்கிறார்கள். பார்ப்பனர்கள் மற்றும் கயஸ்தா பிரிவினர் மட்டும் மொத்த இடங்களில் கிட்டத்தட்ட அரைவாசி இடங்களைப் பெற்றிருக்கிறார்கள். அதாவது மக்கள்தொகையில் அவர்கள் கொண்டிருக்கும் விகிதத்தைவிட கிட்டத்தட்ட நான்கு மடங்கு அதிகம்.

*பெயரில் இருந்து யூகத்தின் அடிப்படையில் ஜாதி அடையாளத்தைக்கண்டு செய்யப் பட்டிருக்கும் ஆய்வுமுறை என்பதால், இந்த எண்ணிக்கைகளும் விகிதங்களும் துல்லியமற்றதாக இருக்கலாம். ஆனால், ஜாதியப்பிரிவுகள் பிரதிநிதித்துவப்படுத்தப் பட்டிருக்கும் பொதுவான முறையை அறிந்து கொள்வதற்கு இந்தமுடிவுகள் போதுமானதாக உள்ளது. அதிகார மய்யங்களில் உயர்ஜாதியினர் தொடர்ந்து பெரிய எண்ணிக்கையில் இடம் பெற்றிருப்பதன் மூலம் அந்தப் பொது அமைப்புகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். மற்றஜாதியினரின்*

**சமூகவாய்ப்புகளும், சலுகைகளும் மறுக்கப் பட்ட சமூகத்தைச் சேர்ந்த தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சங்கம்கூட உயர்ஜாதியினரின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அதிகாரத்திற்கு எதிராகச் செயல்படக்கூடியதாகக் கருதப்படுகிற அமைப்புகள் கூட ஜாதியப் படிநிலை சமூக அமைப்பின் கோரப்பிடியில் இருந்து தப்பவில்லை**

சமூகத்தினரின் பிரதிநிதித்துவம் சுத்தமாக இல்லை என்று சொல்லமுடியாது, ஆனால் உயர்ஜாதியினர் தங்களுடைய பெரும் பான்மையினால் தன்னிச்சையாகவும் தங்களுக்குச் சாதகமான முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட அதிகார மய்யத்தில் உள்ள பெயர்களில் தலித்துகளை அடையாளம் காணும் முயற்சியும் செய்யப்பட்டது. ஆனால் தலித்துகளை அடையாளம் காணும் அளவுக்கு பெரும் பாலானோர் அவர்களுடைய பெயருக்குப் பின்னால் ஜாதியைக் குறிக்கக்கூடிய பெயரைக் கொண்டிருப்பதில்லை. நாங்கள் விசாரித்ததில் தேடியதில் இருந்து, ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நிறுவனங்களில், குறிப்பிடத்தக்க அளவிற்கு தலித்துகள் இடம் பெற்றிருக்கவில்லை. பல்கலைக்கழக ஆசிரியர்பணி போன்ற சிலவற்றில் மட்டும், இடஒதுக்கீட்டின் பலனால் சிலர் இடம்பெற்றிருந்தனர். ஆனால் அதேசமயம், கண்ணியக்குறைவான பணிகள் என்று கருதப் படுகின்றவற்றில் தலித்துகள் பெரும் அளவில் தங்கள் மக்கள் தொகை விகிதத்தைவிட அதிக எண்ணிக்கையில் இடம்பெற்றிருக்கின்றனர். உதாரணத்திற்கு, துப்புரவுப் பணியாளர்களில் அதிகப் பெரும்பான்மையாக தலித்துகளே உள்ளனர். ரிக்சா இழுப்பவர்களில் நாங்கள் விசாரித்த 30 பேரில் கிட்டத்தட்ட அரைவாசிப்பேர் தலித்துகளே.

அரசு நிறுவனங்களில் இருக்கும் உயர்ஜாதியினரின் ஆதிக்கத்தைக் காட்டிலும், இன்னும் அதிகமாக பொது சமூக அமைப்புகளில் (Civil Society) இருப்பதைக் கண்டிப்பாகக் குறிப்பிட்டாக வேண்டும். உதாரணத்திற்கு, அலகாபாத்தில் செயல்படுகிற அரசு சாரா நிறுவனங்களிலும் (NGO )தொழிற்சங்கங்களின் தலைவர்களிலும் கிட்டத்தட்ட 80 சதவிகிதமும், நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத்தின் (Bar Association) செயற்குழுவில் கிட்டதட்ட 90 சதவிகிதமும், பத்திரிக்கையாளர் சங்கத்தின் பொறுப்பாளர் களில் 100 சதவிகிதமும் உயர்ஜாதியினரின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது.

அதிலும் குறிப்பாக பத்திரிக்கையாளர் சங்கத்தின் பொறுப்பாளர்கள் அனைவரும் பார்ப்பனர் அல்லது கயஸ்தா சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். சமூக வாய்ப்புகளும், சலுகைகளும் மறுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சங்கம் கூட உயர் ஜாதியினரின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அதிகாரத்திற்கு எதிராகச் செயல்படக் கூடியதாகக் கருதப்படுகிற அமைப்புகள்கூட ஜாதியப் படிநிலை சமூக அமைப்பின் கோரப்பிடியில் இருந்து தப்பவில்லை என்பதை நாம் கவனிக்க முடிகிறது. இதனுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அலகாபாத் மாநகராட்சி, அலகாபாத் பல்கலைக்கழகம் போன்ற அரசு நிறுவனங்களில் ஓரளவிற்கு (அதிகமில்லை) சமநிலை இருப்பதாகக் கருத இடமுண்டு. அங்கேயும்கூட அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களில், அதாவது துறைத்தலைவர் (Head of Department) போன்ற இடங்களில், தலித்துகள் பெற்றிருக்கும் பிரதிநிதித்துவம் மிகமிகக்குறைவுதான்.

### 3.3 அதிகாரமும் செல்வாக்கும் இல்லாத இடங்களில்

ஒரு பரந்துப்பட்ட ஒப்பீட்டிற்காக, இடை நிலை மற்றும் கடைநிலைப் பணியில் இருப்ப வர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க ஆரம்பித்தோம். உதாரணத்திற்கு அரசுப்பணியில் இருக்கும் பியூன், கிளர்க் மற்றும் அலுவலகக் காவலாளர் போன்ற இடைநிலைப் பணியாளர்கள் பற்றியும், ரிக்சா இழுப்பவர்கள், தோட்டத் தொழிலாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் போன்ற கடைநிலைப் பணியாளர்கள் பற்றியும் கணக்கெடுக்க ஆரம்பித்தோம். எங்கள் ஆய்வின் நோக்க மெல்லாம் அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களில் இருப்பவர்கள் பற்றியதுதான் என்பதால், இடைநிலை / கடைநிலைப் பணியாளர் பற்றி நாங்கள் சேகரித்த தகவல்கள் முறையானதாகவோ முழுமையானதாகவோ இருக்கவில்லை. ஆனால் சில அடிப்படைத் தன்மைகளையும், பொதுவான சமூக அமைப்புமுறை பற்றியும் தெரிந்து கொள்ள முடிகிறது.

இதன் தொடர்ச்சி 25-ஆம் பக்கம்

# கேள்விகளுக்கு அப்பாற்பட்ட புனிதமா திருமணம்?

என்.கௌரி, தமிழ் இந்து

இந்தியாவில் பாலியல் வன்முறையை அதிகம் நிகழ்த்துபவர்கள் கணவன்மார்களே எனச் சென்ற ஆண்டு வெளிவந்த தேசியக் குடும்ப நலக் கணக்கெடுப்பு (NFHS) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. பெண்கள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறையில் வெறும் 2.3 சதவீதம் மட்டுமே கணவன் அல்லாத பிற ஆண்களால் நடத்தப்படுகிறது எனக் குறிபிட்டுள்ளது அந்த அறிக்கை.

இந்த நிதர்சனம் 'மேரிட்டல் ரேப்'(Marital Rape) எனப்படும் கணவன் மனைவிமீது நிகழ்த்தும் வலுக்கட்டாயமான பாலியல் வல்லுறவு குறித்த விவாதத்தை எழுப்பியது. இதைச் சட்டப்படி தடுப்பது குறித்த சிந்தனையைச் சமூக ஆர்வலர்களிடம் உருவாக்கியுள்ளது. இந்நிலையில் மத்திய உள்துறை இணை அமைச்சர் இதுபற்றித் தெரிவித்த கருத்து அதிர்ச்சி அளிக்கிறது.

இந்தப் பிரச்சினையை மாநிலங்களவையில் கனிமொழி எழுப்பினார். உலக அளவில் பல நாடுகளில் குற்றமாக அறிவிக்கப் பட்டிருக்கும் 'மேரிட்டல் ரேப்' எனப்படும் திருமண வல்லுறவு இந்தியாவில் இன்னும் குற்றமாக அறிவிக்கப்படவில்லை. ஆனால், இந்தியாவில் எழுபத்தைந்து சதவீதப் பெண்கள், திருமணப்பந்தத்தில் வல்லுறவால் பாதிக்கப்படுகின்றனர் என்று ஐ.நா. மக்கள்தொகை நிதியம் தெரிவித்திருக்கிறது. பெண்களுக்கு எதிரான இந்தப் பாகுபாடுகளை ஒழிப்பதற்காக இந்திய அரசை 'திருமண வல்லுற'வைக் குற்றமாக அறிவிக்கச் சொல்லி ஐ.நா. குழு, பரிந்துரைத்திருக்கிறது. ஐ.நா. குழுவின் இந்தப் பரிந்துரையை முன்வைத்து, மத்திய அரசு 'திருமண வல்லுறவு' தொடர்பான சட்டத்திருத்த மசோதாவை விரைவில் கொண்டுவர வேண்டும் என்று கனிமொழி பேசினார்.

மத்திய உள்துறை இணை அமைச்சர் ஹரிபாய் பார்த்திபாய் சௌத்ரி அதற்கு இப்படிப் பதிலளித்திருக்கிறார்: "திருமண வல்லுறவைக் குற்றமாகக் கருதுவது சர்வதேச அளவில் வேண்டுமானால் சரியாக இருக்கலாம். இந்தியாவைப் பொறுத்தவரை, அப்படிக் கருத முடியாது. ஏனென்றால், பல்வேறு காரணிகளான கல்வி, கல்வியின்மை, ஏழ்மை, எண்ணற்ற சமூக வழக்கங்கள், விழுமியங்கள், மத நம்பிக்கைகள், சமூகத்தின் மனப்போக்கு போன்றவை திருமணத்தைப் புனிதமாக நினைக்கச் சொல்கின்றன"

இந்தக் கருத்து நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. திருமணம் எனும் நிறுவனத்தின் புனிதத்தைக் காப்பாற்ற, பெண்ணுடலும் உள்ளமும் சிதைக்கப்பட்டால் தவறில்லை என்று அமைச்சர் சொல்ல வருகிறாரா? இதை ஒரு பிரச்சினையாகவே அங்கீகரிக்க அவர் மறுப்பதை வேறு எப்படிப் புரிந்துகொள்வது?

**குற்றமும் புனிதமும் : தோழர் ஓவியா**

திருமணம் என்னும் சமூக நிறுவனத்தைப் புனிதம் என்று சொல்லி, அந்நிறுவனத்தைக் கேள்விகளுக்கு அப்பாற்பட்டதாக மாற்றிவிடலாம் என்று நினைக்கிறதா இந்த அரசு? இதன் மூலம் பிற்போக்கு மதவாத சக்திகளைத் திருப்திப்படுத்த முயல்கிறது. திருமண வல்லுறவை குற்றமாகச் சொல்ல முடியாது என்னும் அரசின் இந்த நிலைப்பாடு பெண்களுக்கு முற்றிலும் எதிரானது எனப் பல்வேறு அமைப்புகளும் குரல் எழுப்பியிருக்கின்றன.

மத்திய இணையமைச்சர் தெரிவித்திருக்கும் கருத்துகள் ஆபத்தானவை என்கிறார் சமூகச் செயல்பாட்டாளர் ஓவியா. "திருமணம் புனிதமானது. அதனால், திருமண வல்லுறவைக் குற்றமாக வரையறுக்க முடியாது என்று அவர் சொல்வது சமூகத்தை ஒரு நூற்றாண்டு பின்னுக்கு அழைத்துச் செல்வதற்குச் சமமானது. கணவன் என்னும் ஆணுக்கு, மனைவி என்னும் பெண்ணின் உடல் மீது மட்டற்ற உரிமை இருக்கிறது என்று சொல்வது மனித உரிமைகளை மீறும் விஷயமாகும். மதவாதத்தின் பலவீனமான சிந்தனையாகத்தான் அரசின் இந்த வெளிப்பாட்டைக் கருதமுடிகிறது" என்கிறார்.

இந்தியச் சமூகத்தில் பெண்ணின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்குச் சட்டம் இயற்றப்படும் போதெல்லாம், திருமணம் புனிதமானது, அதற்கு எதிராகச் சட்டங்கள் இயற்றப்படக் கூடாது என்ற குரல்கள் ஓங்கி ஒலித்துவந்ததைச் சுட்டிக்காட்டும் ஓவியா, அந்தப் பிற்போக்குக் குரல்களை மீறி, கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கத்தைத் தடைசெய்யும் சட்டம் (1829), விதவைகள் மறுமணச் சட்டம் (1856), குழந்தைத் திருமணத்தைத் தடுக்கும் சாரதா சட்டம் (1929), பெண்களுக்கு விவாகரத்து உரிமை, ஜீவனாம்ச உரிமை வழங்கும் சட்டங்கள் ஆகிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இவை

எல்லாமே திருமணத்துக்குக் கொடுக்கப் பட்டிருந்த புனித அந்தஸ்தை உடைத்துத்தான் எழுதப்பட்டன" என்கிறார்.

**சட்டம் இயற்றுவது சாத்தியமா?**

திருமணத்தை ஆணுக்கும் பெண்ணுக் குமான ஒரு ஒப்பந்தமாகவே இந்தியச் சட்டங்கள் பார்க்கின்றன. விவாகரத்து உரிமை அதனால்தான் சாத்தியப்படுகிறது. திருமணம் என்பது சம உரிமை நிலவ வேண்டிய சட்டபூர்வ அமைப்பு. அங்கே புனிதத்துக்கு இடமில்லை என்பதை நம் இந்தியச் சட்டங்களின் வரலாற்றைப் பார்த்தாலே எளிமையாகத் தெரிந்துகொள்ளலாம்.

டெல்லி பாலியல் வன்புணர்வு நிகழ்வுக்கு எதிராக நடைபெற்ற தொடர் போராட்டங் களுக்குப் பிறகு அமைக்கப்பட்ட நீதிபதி வர்மா குழு 'திருமணவல்லுற'வைக் குற்றமாக அறிவிக்கும் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ளச் சொல்லி 2013-ம் ஆண்டிலேயே பரிந்துரைத்தது. ஆனால், இந்திய அரசாங்கம் அதைச் செய்யாமல் தவிர்த்துக் கொண்டிருந்தது. இப்போது சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள முடியாது என்றும் சொல்லியிருக்கிறது.

**வழக்கறிஞர் அஜிதா**

அரசின் இந்த நிலைப்பாடு அதன் பிற்போக்கு மதச்சார்பு அரசியலின் வெளிப்பாடுதான் என்கிறார் வழக்கறிஞர் அஜிதா. "திருமண வல்லுறவுக்கு எதிரான தண்டனைச் சட்டத்தை இரண்டு விதமாகப் பிரிக்க முடியும். பதினெட்டு வயதுக்குக் கீழ் இருப்பவர்கள், பதினெட்டு வயதுக்கு மேல் இருப்பவர்கள் என்று பிரிக்கலாம். இந்தியத் தண்டனைச் சட்டம் 375 பிரிவின்படி, ஓர் ஆண் திருமண பந்தத்தில் தன் மனைவியுடன் (பதினைந்து வயதுக்கு மேல் இருந்தால்) கட்டாய உறவில் ஈடுபடுவதைப் பாலியல் குற்றமாகக் கருத முடியாது. அதுவே, மனைவி பதினைந்து வயதுக்குள் இருந்தால் அதைப் பாலியல் குற்றமாகக் கருத முடியும். இதுவே ஒரு சட்டரீதியான முரண்தான்.

ஏனென்றால், பதினெட்டு வயதுக்குக் கீழ் இருக்கும் பெண்களுக்கு எதிராக நடக்கும் பாலியல் குற்றங்களுக்குக் குழந்தைகள் வதைத் தடுப்புச் சட்டத்தின் (POCSO Act) மூலம்தான் தண்டனை வழங்க வேண்டும். குடும்ப வன்முறைத் தடைச் சட்டத்திலும் (PWDV Act) கட்டாய உடலுறவுக்குத் தண்டனை இருக்கிறது. ஆனால், இவை சிவில் சட்டங்கள் . திருமண வல்லுறவு என்பது ஒரு குற்றச் செயல். அதைக் குற்றவியல் சட்டத்தில் சேர்க்காமல் இந்திய அரசு தட்டிக்கழிப்பது பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்குப் பின் கதவு வழியாக அனுமதி வழங்குவது போன்றதுதான்" என்கிறார் அஜிதா.

இந்திய அரசு, பெண்களுக்கு எதிரான வன்முறைகளைச் சகித்துக்கொள்ளவே மாட்டோம் (Zero tolerance) என்று உறுதியளித்தது உதட்டளவில்தான் இருக்கிறது. ஒருவேளை, இந்தத் திருமண வல்லுறவுத் தடைச் சட்டத்தைப் பெண்கள் கணவருக்கு எதிராகத் தவறாகப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்றால் அதைத் தடுப்பது எப்படி என்றுதான் யோசிக்க வேண்டுமே தவிர, அதற்காகக் குடும்பத்துக்குள் பாலியல் வன்முறையை அனுமதிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத விஷயம்.

"ஒருவேளை, இந்தத் திருமண வல்லுறவைக் குற்றமாக அறிவித்தால் எங்கே நாடு முழுக்க வழக்குகள் வந்து குவிந்துவிடுமோ என்று அரசு பயப்படுவதாகவே வைத்துக்கொள்வோம். ஆனால், அதற்காக ஒரு குற்றத்தைக் குற்றமாக வரையறுக்காமல் இருப்பது எந்தவிதத்திலும் நியாயமில்லை. பாலியல் குற்றங்களுக்கு எதிராகப் புகார் அளிக்கும் பெண்களுக்கு உதவும் வகையில் நாடு முழுக்கவும் எல்லா மாநிலங்களிலும் 'ஒன் ஸ்டாப் கிரைசிஸ் சென்டர்' (*One Stop Crisis Centre*) அமைக்க வேண்டும் என்று ஜூன் 2014-ல் அரசு அறிவித்தது. ஆனால், அது இப்போது அவ்வளவு தீவிரமாகச் செயல்பட வில்லை. பெண்களுக்கு எதிரான வன்முறை எப்படி இருந்தாலும் அதைத் தடுக்க வேண்டியது அரசின் கடமை" என்கிறார் அஜிதா.

**குடும்ப வன்முறையின் தாக்கம்**

மதவாதிகள் ஒருபுறம் பெண்ணுடலைப் புனிதம் என்கின்றனர். மறுபுறம் அதைச் சிதைப்பதை நியாயப்படுத்துகின்றனர். கணவனுக்குத் தன் மனைவி மீது எல்லா உரிமைகளும் - பாலியல் வன்முறை செய்யும் 'உரிமை ' உள்பட - இருக்கிறது என்று நிலைநாட்ட விரும்புகின்றனர். தனிமனித உரிமை பற்றியெல்லாம் திருமணத்துக்குள் பேச முடியாது, பேசவும் கூடாது. ஏனெனில் திருமணம் சொர்க்கத்தில் இறைவனால் நிச்சயிக்கப்படுகிறது. அதனால் அதன் புனிதம் கேள்விகளுக்கு அப்பாற் பட்டது என்னும் பார்வை இன்னமும் நிலவுகிறது.

குடும்ப அமைப்புகள் சிதைந்துவிடக் கூடாது என்று அரசு காட்டும் அக்கறையைப் பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளைத் தடுப்பதிலும் காட்ட வேண்டும்.

நன்றி: 10.05.2015 தமிழ் இந்து நாளிதழ்

# ஓ காதல் கண்மணி

நீண்ட இடைவெளிக்குப் பிறகு மணிரத்னம் முற்றிலும் இளமையாக, ஃப்ரெஷாக ஒரு காதல் கதையைப் படமாக்கியிருக்கிறார். இராமாயணம், மகாபாரத்தையெல்லாம் காப்பியடித்து எதுவும் வேலைக்கே ஆகாது என்ற நிலையில் 14 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் துள்ளலான ஒரு களத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

மென்பொருள் துறையில் பணியாற்றும் ஒரு பையனும், உயர்படிப்புக்காக வெளிநாட்டுக்குச் செல்லக் காத்திருக்கும் ஒரு பெண்ணும் காதலாகிக் கசிந்துருகி, லிவிங் ரிலேஷனில் இணைகிறார்கள். அதாவது உடன்போக்கில் இணைகிறார்கள். அந்த உறவில் இருக்கும்போதே அந்த இணை அந்த லிவிங் ரிலேஷனைவிட திருமணம் என்ற முறையே சிறந்தது என்று முடிவுசெய்து திருமணம் செய்து கொள்கிறது. இதுதான் கதை.

லிவிங் டுகெதெர், கம்ப்பானியன்ஷிப் உறவுகளை மய்யக்கருவாக வைத்து தமிழில் படம் எடுத்ததற்காக முதலில் மணிரத்தினத்தைப் பாராட்டவேண்டும். லிவிங் ரிலேஷன் என்ற பழந்தமிழர்களின் உடன்போக்குப் பண்பாட்டைக் கொச்சையாகத்தான் காட்டுகிறார் இயக்குநர். இருந்தாலும் அந்த உடன்போக்கு உறவை அடிப்படையாக வைத்து ஒரு விவாதத்தைக் கிளப்பியுள்ளதற்காக மட்டும் அவரை முதலில் பாராட்டலாம்.

மிகச்சிறந்த நடிகரான மம்முட்டியின் மகன் துல்கர் சல்மான் தான் நாயகன். மணிரத்னம் டைப் கதாநாயகியாக நித்யாமேனன். இந்தியாவின் மிகப்பெரும் தொழில்நுட்பக் கலைஞர்கள் இணைந்திருக்கிறார்கள். ஆனால் தற்போது இந்தியாவில் பெருகிக்கொண்டிருக்கும் அவசியமான ஒரு பண்பாட்டு மாற்றத்தைத் தவறாகக் காட்டியிருப்பதைக் கண்டிக்கவேண்டும்.

நாயகனும் நாயகியும் இரண்டாவது சந்திப்பிலேயே....இல்லை இல்லை இரண்டாவது பார்வை உரசலிலேயே காதலிக்கத் தொடங்குகிறார்கள். ஓரிரு நாட்களிலேயே இதழோடு இதழ் பதிக்கிறார்கள். அடுத்தசில நாட்களிலேயே ஓருடல் ஈருயிராகிறார்கள். இன்றைய இளைய சமுதாயம் இப்படித்தான் காதலிக்கிறது என்ற தோற்றத்தை உருவாக்குகிறது இப்படம்.



லிவிங் ரிலேஷனில் வாழ்பவர்கள் தங்களது உடல்தேவைக்காக மட்டுமே இந்த உறவைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்ற கருத்தையும் திணிக்கிறார்கள். நடைமுறையில் அப்படி சிலர் இருப்பதாகக் கலாச்சாரக் காவலர்கள் சொன்னாலும், அதாவது இன்றைய நகர்ப்புறத்து இளைய சமுதாயம் உடல்தேவைக்காக மட்டுமே சேர்ந்து வாழும் முறையைத் தேர்ந்தெடுப்பது உண்மையாக இருந்தாலும் அதில் கருத்துச்சொல்லவோ, அல்லது அதைத் தவறென்று சொல்லவோ எவருக்கும் அருகதை இல்லை.

ஆனால் இப்படி உடல்தேவைக்காக மட்டுமே இணைந்து வாழ்வதைத் தவறாகக் கருதும் இந்த சமுதாயத்தின் பொதுப்புத்திக்குத் தீனிபோடும் வகையிலேயே காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல இந்தமாதிரியான லிவிங் ரிலேஷனில் இருப்பவர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் புரிந்துகொள்வதும், பொறுப்பேற்றுக்கொள்வதும், விட்டுக்கொடுப்பதும், சமுதாயப் பொறுப்புடன் வாழ்வதும் தேவையில்லை என்பதுபோலவும், ஒருவருக்கொருவர் எதிர்பார்ப்புகளோடு இருக்கக் கூடாது என்பது போலவும் காட்சிகளை அமைத்திருக்கிறார்கள். எப்போதும் முத்தமிட்டுக் கொள்வதும், காமத்தில் ஈடுபடுவதும், இவை பற்றி வெளிப்படையாகப் பேசிக்கொள்வதும் தான் கம்பானியன்ஷிப் என்று புரியவைக்க முயற்சி செய்திருக்கிறார்கள்.

மிகப்பெரும் கொள்கையாளர்கள், அறிவு ஜீவிகள் என்று கருதிக்கொள்பவர்களெல்லாம் கூட காவிகளுக்கு எதிராக முத்தத்தை முன்னி றுத்தியபோது, அலறித்துடைத்து தங்களது கருப்பு மற்றும் சிவப்பு சட்டைகளைக் கிழித்துக்கொண்டு காவி உள்ளாடைகளோடு வலம்வந்தார்கள். அப்படிப்பட்ட சமுதாயத்தில் முத்தத்தின் வழியாக தமது உள்ளார்ந்த அன்பை வெளிப்படுத்தும் காட்சிகளை அதிகமாகவும் அடிக்கடியும் வைத்திருப்பது அந்த முத்தத்தையும், காமத்தையும் தவறாகச் சித்தரிப்பதே ஆகும்.

நம்மைப் பொறுத்தவரை தற்போது லிவிங் ரிலேஷனில் சேர்ந்து வாழும் பல இணையர்களை நேரடியாகப் பார்த்திருக்கிறோம். பழகியிருக்கிறோம். திருமணம் என்ற உறவுக்குள் வந்துவிட்டால்கூட நடைமுறையில் லிவிங் டுகெதெர் உறவாக வாழும் பல இணையர்களையும் பார்த்திருக்கிறோம்.

ஒருவருக்கொருவர் ஆதிக்கம் செலுத்தாமல், இன்ப துன்பங்களில் தோள் கொடுத்து, தேவைப்படும்போதெல்லாம் விட்டுக்கொடுத்து, ஒருவரது எதிர்காலத் திட்டங்களில், வாழ்வின் இலட்சியப் பயணங்களில் தடையிடாமல் - தலையிடாமல், உறுதுணையாக இருக்கும் உறவுகளாகவே அவர்களைப் பார்த்திருக்கிறோம். இந்த இணையர்களுக்குள் இப்படிப்பட்ட தோழமை மாறும்போதும் - தமது சொத்தாக ஆணையோ பெண்ணையோ கருதும்போது இயல்பாக அந்த இணை பிரிந்துவிடுகிறது. இப்படித்தான் வாழ்ந்து வருகிறார்கள் உடன்போக்கு இணையர்கள். தோழர் பெரியார் இதுபோன்ற உறவுகள் பற்றி 1931 லேயே கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

“கல்யாணம் என்பதே வேண்டியதில்லை என்று சொல்லக் கூடிய திட்டம் சுயமரியாதை இயக்கக் கொள்கையில் ஒரு காலத்தில் வரக்கூடும். அந்த மாதிரி கல்யாண முறையும் இன்றைய குடும்ப வாழ்க்கை முறைகள் ஒழிந்து ஆணும் ஆணும் சிநேகமாய், அன்பாயிருப்பது போலவே ஏதோ ஒரு பெண்ணும் ஏதோ ஒரு ஆணும் பெண்ணும் சிநேகமாயிருக்கின்றார்கள் என்கின்ற அளவில் மாத்திரமே சம்பந்த மிருக்கும்படியான காலமும் வரும். பெரியார் - குடி அரசு - 21.06.1931”

பெரியார்1931 இல் பேசியவை தற்போது 2015 லும் ஒரு விவாதப்பொருளாக இருக்கிறது. இன்றும் நாம் தேர்ந்தெடுக்க முடியாத பண்பாடாக இருக்கிறது. பெருகிவரும் இந்த திராவிடர் பண்பாட்டை பார்ப்பன மணிரத்னம் என்னதான் கொச்சைப்படுத்தியிருந்தாலும் அடுத்து திருமணம் செய்து கொள்ளப்போகும் தருவாயில் இருக்கும் இளைய சமுதாயத்திடம் நமக்குச் சாதகமான தாக்கத்தைத்தான் ஓ கே கண்மணி உருவாகியிருக்கிறது.

1989 இல் இதே மணிரத்னம் இயக்கிய ‘இதயத்தைத் திருடாதே’ படத்தில் நாயகன் நாகார்ஜுனாவைப் பார்த்து நாயகி கிரிஜா “ஓடிப்போலாமா” என்பார். 25 ஆண்டுகளுக்கு முன்பு அந்த “ ஓடிப்போலாமா” என்ற ஒற்றைச் சொல் எல்லாக் கல்லூரிகளிலும் எதிரொலித்தது. பல காதல்கள் அதனால் உண்டானது. 2000 த்தில் மணிரத்னம் இயக்கிய ‘அலைபாயுதே’ படத்தில் மாதவனும் ஷாலினியும் பதிவுத் திருமணம் செய்துவிட்டு வீட்டுக்குச் சொல்லாமல், தெரியாமல் அவரவர் வீடுகளிலேயே வாழ்ந்து வருவது போல காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

அந்தப்படம் வருவதற்கு முன்பே நாம் பல காதல் இணையர்களுக்கு அப்படிப்பட்ட பதிவுத் திருமணங்களைச் செய்து வைத்திருக்கிறோம். ஆனால் அலையாயுதேவுக்குப் பிறகு அந்த வகையான திருமணமுறை அலையாகவே பாய்ந்தோடியது. இளைஞர்களிடையே அதுபோன்ற ஒரு பாசிடிவ் எண்ணத்தைத்தான் இப்படம் உருவாக்கியிருக்கிறது. முற்போக்கு அமைப்புகள், கலை இலக்கிய அமைப்புகள் இதுபோன்ற படங்களைப்பற்றிய விவாத அரங்கங்களை நாடுமுழுதும் நடத்த வேண்டும்.

...இன்பத்திற்காக கல்யாணம் என்றால் அதற்கேற்றமுறையில் கல்யாணத்திட்டம் அமைக்கப்பட வேண்டுமே ஒழிய மற்றப்படி இன்பமும் காதலும் அல்லாமல் வெறும் உலகத்தை நடத்துவதற்கும் உலக விருத்திக்கு என்று புலபுலெனபிள்ளைகளைப் பெறுவதற்கும் ஆண்மக்களுக்கு அவனது வாழ்வுக்கும் கீர்த்திக்கும் திருப்திக்கும் நிபந்தனையற்ற நிரந்தர அடிமையாகப் பெண் இருப்பதற்கும் தான் கல்யாணம் என்பதானால், அம்மாதிரி கல்யாண வாழ்க்கையில் நமது பெண் மக்கள் ஈடுபடுவதை விடக் கல்யாணமே இல்லாமல் வாழுவதையோ அல்லது அவர்கள் இஷ்டப்படி சர்வசுதந்திரத் தோடு நடந்து கொள்வதையோ தான் நாம் ஆதரிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். சம சுதந்திரத்தில் இயற்கை உணர்ச்சியில் சமசந்தர்ப்பம் அளிக்கப்படாத முறையைக் கொண்ட கல்யாணங்களை நாம் விபசார வாழ்க்கை என்றுதான் சொல்ல வேண்டி யிருக்கிறது...

பெரியார் - குடி அரசு - 10.03.1929

அதி அசுரன்

# நிலக்கொள்ளை

## மீண்டும் பார்ப்பனர்களின் பொற்காலம்

நிலம் கையகப்படுத்தும் சட்டதிருத்த முன்வரைவு இந்த ஆண்டு 2015 பிப்ரவரியில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை இந்த சட்டமுன்வரைவுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. காங்கிரஸ், திரிணாமூல். தேசியவாத காங்கிரஸ் கட்சிகள், அண்ணா ஹராரே, ஜனதாதளம், ஆம் ஆத்மி, மார்க்சிய லெனினிய அமைப்புகள், பா.ம.க, தே.மு.தி.க, ம.தி.மு.க போன்ற பல்வேறு அரசியல் கட்சிகளும், முற்போக்கு அமைப்புகளும் தொடர்ந்து பரப்புரைகளையும், ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங் களையும் நடத்தி வருகின்றன.

'நிலம் கையகப்படுத்துதலில், நியாயமான இழப்பீடு பெறும் உரிமை மற்றும் வெளிப்படையான தன்மை, மறுகுடியமைப்பு, மறுகுடியேற்ற திருத்த சட்டம்' என்ற பெயரில் கடந்த காங்கிரஸ் அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அதில் சில பாது காப்புத்தன்மைகள் இருந்தன. அந்த பாதுகாப்புத் தன்மைகளைத் தகர்த்து தற்போதைய பா.ஜ.க அரசு ஒரு புதிய நிலம் கையகப்படுத்தும் திருத்த சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

இப்புதிய சட்டத்தின்படி நிலத்தைப் பறிகொடுக்கும் விவசாயிகளிடம் அரசு முன்அனுமதி பெறவேண்டிய அவசியமில்லை. நிலத்தைப்பறிமுதல் செய்யும் பகுதிகளில் ஏற்படும் சமுதாயப் பாதிப்புகளைக் கணக்கில்கொள்ள வேண்டியதில்லை. தான் அடைத்த பாதிப்புக்காக எந்த விவசாயியும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்குப் போக முடியாது. பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் உள்ள பெரும்பான்மை நிலங்களைக் கையகப்படுத்திக் கொண்டு அவற்றை அடமானம் வைத்து முறைகேடாகப் பணம் சம்பாதிக்கலாம். எந்தக் காரணத்துக்காக - எந்தத் திட்டங்களுக்காக நிலங்கள் கையகப்படுத்தப்படுகிறதோ அந்தத் திட்டங்களைச் செயல்படுத்தாவிட்டாலும் மீண்டும் நிலங்கள் மக்கள் வசம் திரும்ப ஒப்படைக்க வேண்டியதில்லை என்பது போன்ற பல அடாவடித்தனமான திருத்தங்கள் இந்தத் திருத்தச்சட்ட முன்வரைவில் இடம் பெற்றுள்ளன.

இந்த மிகப்பெரும் பார்ப்பன - பன்னாட்டுக் கூட்டுக்கொள்ளையை நாம் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டியது மிகவும் அவசியம். இந்தச் சட்டமுன்வரைவுக்கு எதிரான போராட்டக் களங்களில் நாம் இணைந்து பணியாற்றவேண்டும். ஆனால் அதேசமயம் நிலம் கையகப்படுத்துதலின் மூலத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இதுபோன்ற நிலக்கொள்ளை இப்போதுதான் நடக்கின்றதா? இப்போது நிலக்கொள்ளையை எதிர்த்துப் போராடுபவர்கள் இதற்கு முன்பு பல நூற்றாண்டுகளாக நடைபெற்ற நிலக்கொள்ளைகளை இதுவரை கண்டுகொண்டார்களா? தற்போது நடைபெறும் போராட்டங்களில் அவற்றைக் குறிப்பிடக்கூட மறப்பது ஏன்? என்பது போன்ற சில கேள்விகள் நம்முன் எழுகின்றன.

### பார்ப்பனர்களின் பிரம்மதேய நிலக்கொள்ளை

சங்ககாலத்திலிருந்தே நமது மன்னர்களின் அறிவின்மையாலும், அந்நியர்களான பார்ப்பனர் களின் நயவஞ்சகத்தாலும் நம்முடைய பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பறிபோயிருக்கின்றன. அந்த நிலக்கொள் ளைக்குப் பெயர் 'பிரம்மதேயம்'. சங்க காலத்தில் அதாவது கி.பி 2 ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலத்தில், சேரமன்னன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர் கண்ணன் என்ற பார்ப்பனர் புகழ்ந்து பாடியுள்ளார். அப்படிப் புகழ்ந்து பாடி அந்தப் பார்ப்பனர் பெற்ற பரிசு என்ன தெரியுமா? 500 ஊர்கள். 500 ஊர்களை எந்த வரியும் அற்ற பகுதியாக அறிவித்து அவற்றை பார்ப்பனருக்குப் பரிசாக வழங்கியுள்ளான். காங்கிரசு அரசு கொண்டுவந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் போல வரி வசூலிப்பிலிருந்தும் விலக்கு அளித்து பார்ப்பனர்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்ட நிலங்கள் தான் பிரம்மதேயங்கள் என அழைக்கப்பட்டன.

இந்தியாவின் பொற்காலம் என பார்ப்பன வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடும் காலம் குப்தப்பேரரசு ஆட்சி செய்த காலமாகும். கி.பி 375

முதல் 414 வரை நடந்த குப்தப்பேரரசு காலத்தில்தான் 'பிரம்மதேயம்' என்ற பார்ப் பனர்கள் நடத்திய நிலக்கொள்ளை மிக அதிகமாக நடைபெற்றுள்ளது. எனவேதான் இந்தக்காலம் பார்ப்பனர்களால் பொற்காலம் எனப்பட்டது.

ஆக 2000 ஆண்டுகளுக்கு முன்பே அந்நியர்களின் நிலக்கொள்ளை என்பது இந்தியப் பகுதிகளில் தொடங்கிவிட்டது. இந்த நிலக்கொள்ளைக்கு அடிப்படையக இருந்தது இந்து வேத மதமும், இந்துமத சாஸ்திரங்களுமாகும். இந்து மதத்தின் முக்கிய சட்டநூலாகக் கருதப்பட்ட மனுசாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சில சட்டங்களைப் பார்ப்போம்.

"சூத்திரன் வீட்டிலிருந்து கேளாமலும் யோசிக்காமலும் தேவையான பொருளைப் பிராமணன் பலாத்காரத்தினால் கொள்ளையிடலாம்." அத்தியாயம்.11.சுலோகம்.13.

"பிராமணன் சந்தேகமின்றி சூத்திரன் தேடிய பொருளைக் கைப்பற்றலாம். ஏனென்றால் அடிமையாகிய சூத்திரன் எவ்விதப் பொரு ளுக்கும் உடையவனாக மாட்டான்" அ 8. சு.417

"சூத்திரன் பொருள் சம்பாதித்தால், அது அவனுடைய எஜமானனாகிய பிராமணனுக்குச் சேர வேண்டுமேயன்றி சம்பாதித்தவனுக்குச் சேராது" அ 9. சு 416.

"சூத்திரனுடைய பொருளை பிராமணன் தம் இஷ்டப்படி கொள்ளையிடலாம்." அ.9. சு.248.

பெரும்பான்மை சமுதாயத்தினராகிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களை இந்து வேதங்கள் 'சூத்திரர்கள்', வேசிமக்கள் என்று இழிவுபடுத்துவதோடு அவர்களது பொருளைக் கொள்ளையிடலாம் என்ற கருத்தை பக்தியோடு, ஆன்மீகத்தோடு கலந்து கொடுத்துவிட்டனர். இந்த மனு நீதியைப் பின்பற்றியே இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக அரசுகள் நடந்தன. மனுநீதியை மீறிய அரசுகள் அழிக்கப்பட்டன. தமிழ்நாட்டில் சேர, சோழ, பாண்டியர் என்ற வேறுபாடின்றி அனைத்து மன்னர்களும் அந்நியப் பார்ப்பனர்களுக்கு நிலங்களை வாரி வழங்குவதில் முனைப்போடு செயல்பட்டனர்.

**"நிலம் கையகப்படுத்தும் திருத்த மசோதாவை எதிர்ப்போர் தங்களது எதிர்ப்பில் ஒரு நேர்மை இருக்குமானால் இனியாவது பார்ப்பனர்களின் பிரம்மதேய நிலக்கொள்ளை, பார்ப்பன – சைவ மடங்களின் நிலக்கொள்ளை, பஞ்சமி நிலங்களை அபகரித்த இடைநிலை ஜாதியினரின் நிலக்கொள்ளை, கல் முதலாளி களின் நிலக்கொள்ளை என அனைத்து வகையான நிலக்கொள்ளைகளையும் எதிர்க்க வேண்டும்.**

### பார்ப்பன – சைவ மடங்களின் நிலக்கொள்ளை

அடுத்த கட்டமாக புத்தமதத்திலும் சமண மதத்திலும் பார்ப்பனர்களில் ஊடுருவல் அதிகமாகிய பிறகு, புத்த மடங்களுக்கும் நிலங்கள் கொடுக்கப்பட்டன. அப்படி கொடுக்கப்பட்ட நிலங்களும் மனு சாஸ்திரத்தை நம்பி ஆட்சி செய்த இந்து மறுமலர்ச்சி அரசுகளின் காலத்தில் புத்த, சமண மத மடங்களிடமிருந்து பிடுங்கப்பட்டு நேரடியாக இந்துமதப் பார்ப்பனர் களிடம் வழங்கப்பட்டன. இன்றும் பார்ப்பன சங்கர மடங்களுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சொந்தமாக இருப்பதன் பின்னணி இதுதான். பார்ப்பன மடங்களுக்கு மட்டுமல்ல சைவ மடங்களுக்கும், ஆதீனங்களுக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஆதிக்கத்தில் உள்ளன. கல்வியை வளர்க்கிறோம். சமயத்தை வளர்க்கிறோம் என்ற பெயரில் அரசர்கள் மற்றும் அப்பாவி மக்களின் மூடநம்பிக்கைகளைப் பயன்படுத்தி இந்தப் பார்ப்பன - சைவ மடங்கள் நிலக்கொள்ளையைத் தொடர்ந்தன.

பிரம்மதேயம் பற்றியோ, பார்ப்பன - சைவ மடங்களின் நிலக்கொள்ளை பற்றியோ இந்தியாவில் தோழர் பெரியாரைத் தவிர வேறு எவரும் கேள்வி எழுப்பவில்லை. மிகப்பெரும் கம்யூனிசப் போராளிகள்கூட இந்தப் பிரம்மதேயங்களையும் மடங்களின் நிலக்கொள்ளை பற்றியும் வாய் திறந்ததில்லை. 2 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் பிற்படுத்தப்பட்ட வருக்கும், அதுகூட இல்லாத தாழ்த்தப் பட்டவருக்கும் இடையே பகையை மூட்டி அதில் குளிர்காயும் பொதுவுடைமை வாதிகள் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஆண்டு வந்த பார்ப்பன மடங்களின் நிலக்கொள் ளையைக் கண்டு கொள்ளாமலேயே இருக்கின்றனர். தோழர் பெரியார் தனது குடி அரசில்,

" உண்மை என்னவென்று ஆராய்ந்து பார்த்தால் இந்த மடங்களின் சொத்துக்கள் யாவும், பொது ஜனக் கல்வி அபிவிருத்தியை உத்தேசித்து முற்காலத்திலிருந்த ராஜாக்களாலும், செல்வவான்களாலும், சிஷ்யர்களாலும் கொடுக்கப்பட்டவைகளே என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தச் சொத்துக்களை இப்பொழுது இவர்கள் பொது ஜன நன்மைக்காக ஒரு கடுகளவாவது செலவழித்து வருகிறார்களா என்று யாராவது சொல்ல முடியுமா?

**மிகப்பெரும் கம்யூனிசப் போராளிகள்கூட இந்தப் பிரம்மதேயங்களையும் மடங்களின் நிலக்கொள்ளை பற்றியும் வாய் திறந்த தில்லை 2 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் பிற்படுத்தப்பட்டவருக்கும், அதுகூட இல்லாத தாழ்த்தப்பட்டவருக்கும் இடையே பகையை மூட்டி அதில் குளிர்காயும் பொதுவுடைமைவாதிகள் பல்லாயிரக்கணக் கான ஏக்கர் நிலங்களை ஆண்டு வந்த பார்ப்பன மடங்களின் நிலக்கொள்ளையைக் கண்டுகொள்ளாமலேயே இருக்கின்றனர்.**

*எந்தக் காரியத்திற்காக இந்த மடாதிபதிகளிடம் சொத்தும் அதிகாரமும் ஒப்படைக்கப் பட்டனவோ, அந்தக் காரியத்தை அவர்கள் சரியாகச் செய்து வராவிட்டால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களையும், அதிகாரங்களையும் அவர்களைவிட்டு மாற்றுவதற்கு முயற்சி செய்வதே நேர்மையான முறையாகும். அப்படியில்லாமல், அவர்கள் தங்களிடம் உள்ள அதிகாரத்தையும், சொத்துக்களையும் அவைகள் கிடைத்த நோக்கத்திற்கு மாறாகத் தங்கள் இஷ்டப்படி துஷ்பிரயோகம் செய்வார்களானால் அதை அரசாங்கமும், சிஷ்யர்களும், பொது ஜனங்களும் கவனிக்காமல் கண்ணை மூடிக் கொண்டோ, அல்லது கவனித்தாலும் ஒன்றும் பேசாமலும் சும்மா அவர்கள் இஷ்டப்படி விட்டுக் கொண்டோ இருப்பது நியாயமாகுமா என்று யோசனை செய்து பார்க்க வேண்டுகிறோம்.-*

*குடி அரசு 10.03.1935*

என்று பார்ப்பன - சைவ மடங்களின் நிலக்கொள்ளைக்கு எதிராகக் குரல் எழுப்பிப் போராடினார். 1935 இல் இவ்வகை மடங்களின் ஆதிக்கத்தைக் கட்டுக்குள் கொண்டுவர நீதிக்கட்சி அரசால் ஒரு சட்டமுன்வரைவு அறிமுகம் செய்யப்பட்டது. அதன் பெயர் 'மட பரிபாலன மசோதா' ஆகும். பொப்பிலி அரசரின் ஆட்சிக்காலத்தில்தான் இந்த 'மட பரிபாலன மசோதா'வும் அறிமுகப் படுத்தப்பட்டது. அதை ஆதரித்து பெரியார் மக்களிடையே பரப்புரை செய்தார். பெரியார் மட்டுமே போராடினார்.

**பஞ்சமி நிலக்கொள்ளை**

தோழர்பெரியாரின் ஆலோசனை பெற்று ஆட்சிசெய்த நீதிக்கட்சி முதலமைச்சர்களும், அமைச்சர்களும் மடங்களின் நிலக் கொள்ளைகளை எதிர்த்து அரசு நிர்வாக அளவில் முயற்சிகளை எடுத்தனர். மட பரிபாலன மசோதாவைக் கொண்டு வந்ததோடு நிற்கவில்லை. தாழ்த்தப்பட்டோருக்கு பஞ்சமி நிலங்களை வழங்குவதிலும் அதிக முனைப்புக் காட்டினர்.

தாழ்த்தப்பட்டோரைப் பொருளாதார ரீதியாகவும் சமூகரீதியாகவும் உயர்த்தவேண்டும் என்ற எண்ணத்தில் 1892 ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியராய் இருந்த ஜே.எச்.ஏ.திரமென்கீர் (Tremenheere) என்ற ஆங்கிலேயரின் பரிந்துரையின் பேரில் ஆங்கிலேய அரசால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென இலவசமாக வழங்கப்பட்ட நிலங்கள் 'பஞ்சமி நிலங்கள்' எனப்படும். இந்தப் பஞ்சமி நிலங்களை தாழ்த்தப்பட்டோர் மட்டுமே வாங்கவோ, விற்கவோ முடியும் என்பது முக்கியமான செய்தி.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலிருந்து பஞ்சமி நிலங்கள் வழங்கப்பட்டன என்றாலும், நீதிக்கட்சி ஆட்சி அமைந்தபிறகு வழங்கப்பட்டவை 3, 42, 611 ஏக்கர்கள் ஆகும். இது டி.ஜி. போக் ஐ.சி.எஸ். என்ற புள்ளியல் துறை அரசு செயலர் கொடுத்த கணக்காகும். (T.G.Boag ICS, Madras Presidency 1881-1931, pp 132). 1935 ஜூலை வரையில் 4,40,000 ஏக்கர் பஞ்சமி நிலம் வழங்கப் பட்டுள்ளது (Justice, 19th July 1935). மொத்தமாக ஆங்கிலேயர்களும், நீதிக்கட்சி அரசுகளும் வழங்கிய நிலங்கள் சுமார் 12 இலட்சம் ஏக்கர் நிலங்களாகும்.

தாழ்த்தப்பட்டோருக்குச் சொந்தமான அந்த 12 லட்சம் ஏக்கர் நிலங்களில் தற்போது தாழ்த்தப் பட்டோரிடம் மிஞ்சியிருப்பவை சுமார் 2 இலட்சம் ஏக்கர் நிலங்கள் மட்டுமே ஆகும். சுமார் 10 இலட்சம் ஏக்கர் நிலங்கள் ஆங்காங்கே உள்ள இடைநிலை ஜாதியினரால் அபகரிக்கப்பட்டுள்ளன. எந்தக் கேள்வியும் இல்லாமல் பல ஆண்டுகளாக இந்தப் பஞ்சமி நிலங்கள் பிற்படுத்தப்பட்ட மற்றும் முன்னேறிய ஜாதிகளால் கொள்ளையிடப்பட்டுள்ளன. மிக நீண்ட காலத்திற்குப்பிறகு 1993 இல் செங்கல்பட்டு மாவட்டம் காரணையில் பஞ்சமி நிலமீட்புக்காகப் போராட்டம் தொடங்கியது. 10. 10. 1994 இல் செங்கல்பட்டு மாவட்டத் துணை ஆட்சியர் அலுவலகத்திற்குக் கோரிக்கை மனுக்களை அளிக்கவந்த தாழ்த்தப்பட்ட சமுதாயப்போராளிகள்மீது காவல் துறை துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் 32 மக்கள் காயமடைந்ததோடு ஜான்தாமஸ், ஏழுமலை ஆகிய இரண்டு தலித் இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

இந்தக்கொடூரத்திற்குப் பிறகு எண்ணற்ற தலித் இயக்கங்களும், தலித் அமைப்புகளும், திராவிடர் மற்றும் திராவிட இயக்கங்கள், பொதுவுடைமை அமைப்புகள் பஞ்சமிநில மீட்பு

குறித்துப் பேசினர். பெரியார் திராவிடர் கழகம் போன்ற சில அமைப்புகள் தொடர் பரப்புரையிலும் ஈடுபட்டனர். இதுவரைசிலநூறு ஏக்கர் நிலங்கள்கூட மீட்கப்படவில்லை. தாழ்த்தப்பட்டோரின் பல இலட்சம் ஏக்கர் நிலங்கள் ஆதிக்கசிந்தனை கொண்ட ஜாதிகளிடம்தான் இன்றும் இருக்கின்றன.

**கல் முதலாளிகளின் நிலக்கொள்ளை**

இவைதவிர தமிழ்நாட்டில் இந்தசமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சுமார் 39 ஆயிரம் கோவில்களுக்குச் சொந்தமாக 4 இலட்சத்து 78 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. கடவுள் என்ற மூடநம்பிக்கையை முன்வைத்து இவ்வளவு அதிகமான நிலங்கள் கோவில்களுக்கு - கோவில்களில் உள்ள சிலைகளுக்கு அதாவது உயிரற்ற கல்முதலாளிகளுக்குச் சொந்தமான சொத்தாக உள்ளன. இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்தச் சொத்துக்கள் முறையாக நிர்வாகம் செய்யப்படுவதில்லை.

**நிலக்கொள்ளையில் உலகவங்கிப் பார்ப்பனர்கள்**

நிலம் கையகப்படுத்தும் சட்டத் திருத்ததிற்கு பின்னால் மட்டுமல்ல இந்தியாவில் தற்போது நடைபெற்றுவரும் அனைத்துப் பொருளாதார சீர்திருத்தங்களுக்கும் பின்னணியில் இந்தியாவின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியம். ரிசர்வ் வங்கி தலைவர் ரகுராம் ராஜன் ஆகியோரும் உள்ளனர். தற்போதைய ரிசர்வ் வங்கி தலைவர் ரகுராம் ராஜன் கடந்த காங்கிரசு ஆட்சிக்காலத்தில் தலைமைப் பொருளாதார ஆலோசகராகப் பணியாற்றினார். இவர்கள் இருவரும் பார்ப்பனர்கள். அதுமட்டுமல்ல இருவரும் உலக வங்கியில் ஒன்றாகப் பணியாற்றியவர்கள்.

இந்த ரகுராம் ராஜனுக்கு முன்பு 2012 ஜூலைவரை இந்தியாவின் முதன்மைப் பொருளாதார ஆலோசகராகப் பணியாற்றியவர் கௌசிக் பாசு. இவரும் பார்ப்பனர்தான். 2012 செப்டம்பரில் இந்த கௌசிக் பாசு உலகவங்கியின் முதன்மைப் பொருளாதார ஆலோசகராகப் பொறுப்பேற்றார். இப்படி உலகவங்கியில் பணியாற்றுபவர்கள் இந்தியாவின் பிரதமராகவும், நிதி அமைச்சர்களாகவும், பொருளாதார ஆலோசகர்களாகவும் வருவகிறார்கள். அதேபோல இந்தியாவில் பொருளாதார ஆலோசகர்களாக பணியாற்று பவர்கள் உலகவங்கியில் முக்கிய உயர் பதவிகளுக்குச் செல்கிறார்கள். இவ்வாறு உலகவங்கியிலும், பன்னாட்டு நிறுவனங்களிலும்,

> **“ உண்மை என்னவென்று ஆராய்ந்து பார்த்தால் இந்த மடங்களின் சொத்துக்கள் யாவும், பொது ஜனக் கல்வி அபிவிருத்தியை உத்தேசித்து முற்காலத்திலிருந்த ராஜாக்களாலும், செல்வவான்களாலும், சிஷ்யர்களாலும் கொடுக்கப்பட்டவைகளே என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தச் சொத்துக்களை இப்பொழுது இவர்கள் பொது ஜன நன்மைக்காக ஒரு கடுகளவாவது செலவழித்து வருகிறார்களா என்று யாராவது சொல்ல முடியுமா?**

இந்திய அரசு ஆலோசகர்களாகவும் மாற்றி மாற்றி பணியேற்பவர்கள் அனைவரும் பார்ப்பனர்களாகவே உள்ளனர்.

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தத் துடிக்கும் பெப்சி, இன்ஃபோசிஸ், வேதாந்தா, எல் அன் டி, போன்ற பன்னாட்டு நிறுவனங்களிலும், ரிலையன்ஸ், டாடா, டி.வி.எஸ் போன்ற இந்தியதேசிய நிறுவனங்களிலும் சி.இ.ஓ க்கள் போன்ற முக்கியப் பதவிகளில் வலம்வருபவர்களும் பார்ப்பனர்களே.

எடுத்துக்காட்டாக சிலரைக் காணலாம். பெப்சி நிறுவனத் தலைவராக உள்ள இந்திரா நூயி, இன்ஃபோசிஸ் நிறுவனத்தலைவர் நாராயணமூர்த்தி, மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் சி.இ.ஓ சத்யா நாதெள்ளா, எல்டி நிறுவனத்தலைவர் கே.வெங்கட்டரமணன், வேதாந்தா நிறுவன சி.இ.ஓ அகிலேஷ் ஜோஷி, டி.சி.எஸ்.நிறுவனத்தின்சி.இ.ஓ என்.சந்திரசேகரன், காக்னிஸன்ட் நிறுவனத் துணைத்தலைவர் இலட்சுமி நாராயணன் இப்படி பெரும்பாலான இந்திய தேசிய, பன்னாட்டு நிறுவனங்களின் நிர்வாகம் பார்ப்பனர்களின் கட்டுப்பாட்டி லேயே இருக்கின்றன.

நிலம் கையகப்படுத்துவதை எதிர்க்கும் அரசியல் கட்சிகள் மேற்கண்ட பிரம்ம தேயக்கொள்ளை, பார்ப்பன - சைவ மடங்களின் கொள்ளை, பஞ்சமி நிலக்கொள்ளை என எவற்றையும் பேச மாட்டார்கள். ஆனால் மார்க்சிய லெனினிய அமைப்புகள், நக்சல்பாரி அமைப்புகள் இந்த பார்ப்பன நிலக்கொள்ளைகள் பற்றிப் பேசாதது ஏன்? ஜிண்டால்களிடமும், வேதாந்தாக்களிடமும் மோதுபவர்கள் நேரடியாகப் பார்ப்பனர் களிடமும், அவர்களது மடங்களிடமும் அனுசரணையாக நடந்துகொள்வது ஏன்? நிலக்கொள்ளையை எதிர்த்துக் களத்தில் நிற்கும்

அனைத்து முற்போக்கு அமைப்புகளும் தங்களது நிலக்கொள்ளை எதிர்ப்புப் போராட்டங்களில் முதன்மை எதிரிகளான பார்ப்பனர்களை அம்பலப்படுத்தவேண்டும். பார்ப்பன-சைவ மடங்களின் நிலக்கொள்ளையையும், பஞ்சமி நிலப்பறிப்பையும் மக்களிடையே விளக்க வேண்டும். இனிமேலாவது அவைகளையும் எதிர்த்துப்போராட முன்வரவேண்டும்.

இந்தப் பார்ப்பன - இந்திய தேசிய - பன்னாட்டுச் சுரண்டலுக்கு அடிப்படையான பார்ப்பனர்கள், இந்து மத வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் என அனைத்தையும், அனைவரையும் அம்பலப்படுத்த வேண்டும். அடித்தட்டு மக்களின் மத, சாஸ்திர நம்பிக்கைகளைத் தகர்க்கும் நோக்கில் உழைக்கவேண்டும்.

முதன்மை எதிரிகள் யாரென்றே மக்களுக்குக் காட்டாமல் போராடுவதும், முதன்மை எதிரிகளின் முகமுடிகளை மட்டுமே எதிரிகளாகக் காட்டுவதும் எந்த வகையிலும் நேர்மை அற்ற செயலாகும். அனைத்து



# யோகப்புரட்டு

தோழர் பெரியார்

மூச்சடிக்கிப் பலவகையாக யோகஞ் செய்வதன் மூலம் சிறிது சரீர திடம் பெறுவதற்கு ஏதாவது மார்க்கமிருக்குமே யொழிய அதில் வேறு “தெய்வீகத்தன்மை” யாதொன்றுமில்லை யென்பதே நமது அபிப்பிராய மாகும். ஆகவே இதுவும் கழைக் கூத்து, சர்க்கஸ், ஜால வித்தை முதலியவை களைப் போல ஒன்றுதான் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் நமது மக்கள் யோகத்தில் ஏதோ “தெய்வீகத்தன்மை” இருப்ப தாக நம்பியிருப்பதால் அநேகர் யோகிகள் என்று கிளம்பி, சில ஜாலங்களைச் செய்து, பாமர மக்களை மலைக்கச் செய்து ஏமாற்றி வருகின்றனர். ஜன சமூகமும் இவர்கள் பால் பரம்பரையாகவே ஏமாந்து கொண்டும் வருகிறது.

இதற்கு உதாரணமாகச் சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கவனித் தால் விளங்கும். “ஹட யோகம்” என்பதில் சித்தி பெற்றவராகச் சொல்லப்பட்ட நரசிம்மசாமி யென்பவர் சென்னை, கல்கத்தா முதலிய இடங்களில், பிரபல ரசாயன சாஸ்திரிகளின் முன்னிலையில், கொடிய விஷம், கண்ணாடித் துண்டுகள், ஆணிகள் முதலியவற்றை விழுங்கி உயிரோடிருந்தாராம். இந்த நிகழ்ச்சியைக் கண்டு ரசாயன சாஸ்திரிகள் எல்லோரும் மலைத்துப் போய் விட்டனர். ஆகவே யோகத்தின் மகிமையைப் பற்றிப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டது.

ஆனால் இதே நரசிம்ம சாமியார் சில தினங்களுக்கு முன் ரெங்கூனில் இரண்டாம் முறையாக விஷங்களையும் கண்ணாடித் துண்டுகளையும் விழுங்கிய கொஞ்ச நேரத்திற்குள் மரண யோகம் பெற்று விட்டார். இதற்குக் காரணம் விஷம் உண்டவுடன் ‘ஹட யோகம்’ பண்ணுவதற்குக் கொஞ்சம் நேரமாகிவிட்டது என்று பத்திரிகைகளில் சொல்லப்படுகின்றது. ஆனால், அவைகளை உட்கொள்ளும் சாதுரியத்திலோ அல்லது மாற்று மருந்தை உட்கொள்ளுவதிலோ அல்லது பழக்கப்பட்ட அளவை உட்கொள்ளுவதிலோ தவறிவிட்டார் என்று ஏன் சொல்லக் கூடாதென்று தான் நாம் கேட்கின்றோம்.

யோகத்தில் ‘தெய்வத் தன்மை’ உண்டென்பது வீண் புரட்டேயொழிய வேறில்லை. சாதுரியத்தினாலோ அல்லது பழக்கத்தினாலோ அல்லது மாற்று மருந்துகளினாலோ செய்யப்படும் காரியங்களையெல்லாம் யோகமென்றும், மந்திரமென்றும், தேவதையென்றும், தெய்வசக்தியென்றும் சொல்லி ஒரு கூட்டத்தார் ஜன சமூகத்தை ஏமாற்றி வருகிறார்கள் என்பதை அறிய வேண்டு கிறோம். ஆகையால் இனியேனும் இது போன்ற மோசடியான காரியங்களைக் கண்டு ஏமாறாமலிருக்கும்படி எச்சரிக்கை செய்கிறோம்.

*குடி அரசு - துணைத் தலையங்கம் - 03.04.1932*

# "அக்கிரஹார எரிப்புப் போராட்டம்"

## தோழர் மடத்துக்குளம் மோகனின் நினைவுகளிலிருந்து...

நீண்ட காலமாக திராவிடர் கழகம், தமிழ்நாடு திராவிடர் கழகம், பெரியார் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம் என தொடர்ச்சியாக திராவிடர் இயக்கங்களில் செயல்வீரராகச் சுற்றி சுழன்ற வரும் தற்போது தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் திருப்பூர் மாவட்டத் தலைவராகப் பணியாற்றுபவருமான தோழர் மடத்துக்குளம் மோகன் அவர்களிடம் ஒரு நேர்காணல்:

சந்திப்பு: தோழர்கள் பொள்ளாச்சி விஜயராகவன், வெ.நிர்மல்குமார், ஈரோடு வெங்கட்

**தங்களைப் பற்றிய அறிமுகம், திராவிடர் இயக்கத்திற்கு தாங்கள் வந்த விதம் குறித்துக் கூறுங்கள்.**

என் பெயர் மோகன். என் தந்தை பெயர் இராமையா. பொள்ளாச்சி நகரில் பிறந்தேன். அங்கேயே வளர்ந்தேன். என் தந்தை கடுமையான பக்திமான். நகரத்தில் இருந்து சூளேஸ்வரன்பட்டி அழகப்பா காலனி என்ற கிராமத்துக்கு இடம் பெயர்ந்தோம். என் தந்தை எங்கள் வீட்டை அருகில் ஒரு விநாயகர் கோவிலைக்கட்டியவர்.

1976 - 1977 SSLC இறுதி ஆண்டு படிக்கையில் ஒருநாள் பொள்ளாச்சி நகரத்தில் 5 இளைஞர்கள் கருப்புச் சட்டையோடு கொடியுடன் ஊர்வலம் வருகிறார்கள். ஒரு துண்டு நோட்டீசையும் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். (நோட்டீஸில் பக்தகர்களுக்கு 100 கேள்விகள்)

மற்றும் கடவுள் மறுப்பு முழக்கங்களோடு வருகிறார்கள். ஆனைமலை மாசாணியம்மன் கோவிலில் உள்ள குண்டம் பற்றிய செய்திகளின் ஏமாற்று வேலைகளையும் விளக்கியுள்ளனர். வீட்டுக்குள் அந்த நோட்டீசை வைத்துக்கொண்டு என் அண்ணன் படித்துக் கொண்டிருக்கிறார். மேடையில் பேசுவதற்காக. அப்போதுதான் விசயராகவன் தோழரைத் சந்திக்கிறார் என் அண்ணன். இவர்களிடம் அறிமுகப்படுத்துகிறார் (விசயராகவன், கனகு, அங்கமுத்து)

என்னை நேரம் கிடைக்கும்போதெல்லாம் வெத்தலக்கடைச்சந்து வரச்சொல்லிவிடுவார்கள். பின்பு சவுகத்அலி இவரைச் (விசயராகவன்) சந்திக்கிறார். இவர்களோடு நானும் பிரச்சாரத்திற்குப் போகிறேன். துண்டறிக்கை கொடுக்கிறேன். சுவரெழுத்து எழுதுகிறேன். அந்தக் காலங்களில் கோவை ஆறுச்சாமி தோழரை சந்திக்கிறேன். அவரிடம் கற்றுத்தரச் சொல்லிக் கேட்பேன் (நாங்கள் அப்போதெல்லாம் எந்த வேலை செய்தாலும் போட்டி போட்டுக்கொண்டு செய்வோம்)

**திராவிடர் கழகத்தின் எத்தகைய செயல்பாடுகள் தங்களை ஈர்த்தது?**

கோவை ஆறுச்சாமி தோழர்க்கு துணையாக இருந்தேன். திருச்சி செல்வேந்திரனை வைத்து கோவை முழுக்க பிரச்சாரம் நடந்தது. ஓய்வு நேரங்களில் திருச்சி செல்வேந்திரன் அய்யாவோடு தோழர்கள் பெரியாரைப் பற்றி கேட்பார்கள்,பேசுவார்கள். அதிகமாக திமுக காரர்கள் வந்து பேசுவாங்க. அப்போது பெரியார் இயக்கத்தின் தியாகங்களை கஸ்டத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கான நல்ல வாய்ப்பாக இருந்தது. உணவு கூட சாப்பிடாமல் அவர் பேசுவதைக் கேட்கப் போயிருவேன்.

நம் இயக்கத்தின் சார்பில் மூடநம்பிக்கை ஒழிப்புக்காக தீச்சட்டி ஊர்வலம் சுடுகாட்டில் துவங்குகிறது. சுடுகாட்டிலிருந்து இப்படி வந்தா ஊருக்குள்ளே பேய் வந்திடும் என்று பார்ப்பான் மக்களிடம் பரப்பி வருகிறான். ஊர்வலத்தைத் தடை செய்யும் நிலையைக் கொண்டு வர முயற்சி செய்கிறான். போலிஸ் பாதுகாப்பு அதிகரிக்குது. அதே சமயம் சிறப்பான கூட்டம். மக்கள் அதிகமாகக் கூடுறாங்க. புலவர் குழந்தை மற்றும் செல்வேந்திரன் பேசுராங்க . செல்வேந்திரன் அவர்கள் பெரியாரைப் பற்றியும் பார்ப்பனர் படையெடுப்பு பற்றியும், பார்ப்பனர்கள் நம்மைக் கொடுமைப்படுத்திய விதம், அதைப் பெரியார் எவ்வாறு எதிர்த்தார் என்பவை பற்றியெல்லாம் பேசினார். இதுவெல்லாம் என்னை மிகவும் ஈர்த்து விட்டது. நாமும் ஏன் இப்படி பேசக்கூடாது என்று யோசிக்க வைத்தது.

**ஆரம்ப காலங்களில் தங்களது கழகப் பணிகள் குறித்துக் கூறுங்கள்.**

பொள்ளாச்சி *Girls High School* பக்கம் வந்து ஒரு குடிசை போட்டு அங்குதான் இருப்போம். அது தான் இயக்க ஆபிஸ். ஊஞ்சவேலாம்பட்டி சத்தி இண்டஸ்டிரிஸ் ல வேலைக்குச் சேர்ந்தேன். அப்போது பாரதி அறிமுகமாகிறார். முதலில்

ஆழியாரில் நடந்த பயிற்சிவகுப்பில் கருப்புச்சட்டை அணிந்து கலந்துகொண்டேன். அப்போது ஞானம், சுசி போன்ற தோழர்கள் முழுமையாக உள்ளே வருகிறார்கள். பயிற்சி முடிந்தபின் அப்போது பொள்ளாச்சியில் மாபெரும் ஊர்வலம். கருப்புச்சட்டை வெள்ளை பேண்ட் அணிந்து சீருடையோடு இராணுவம்போல் ஊர்வலம் வருகிறார்கள்.

ஊர்வலத்தைப் பார்க்க பயங்கரமான கூட்டம் (கோவில்விழாவைப் பார்ப்பது போல்) ஆனால் போலீஸ் இல்லாமலேயே கூட்டம் கட்டுப்பாடுடன் இருந்தது. புதிய முழக்கங்கள். மக்களின் பிரச்சனைகளை முன் வைத்து முழங்கப்பட்டன. சில முாக்கங்கள்.

"சித்தாளும் கொத்தாளும் நம்மாளு, சீனியர் ஆபீசர் பூணூலு"

"கான்ஸ்டபுள் எல்லாம் நம்மாளு ஐ.ஜி எல்லாம் அவாளு"

"கண்டக்டர் தான்யா நம்மாளு, கலெக்டர் எல்லாம் பூணூலு"

"கண்டதுண்டா கண்டதுண்டா நாத்து நடும் பாப்பாத்தியை, கண்டதுண்டா கண்டதுண்டா"

பொள்ளாச்சியில் அன்று மட்டும் 18 இடங்களில் பெரியாரின் பொன்மொழிகள் அடங்கிய கல்வெட்டுகள் திறப்பு விழா. இவ்வளவு வேலைகளும் 10 தோழர்களை வைத்துதான் நடந்தது.

**தங்களது போராட்டங்களில் குறிப்பிடத்தக்கவை எவை?**

1975 முதல் 1984 வரை கொள்கைக்கான வேலைகள் சிறப்பாக நடந்த காலம் என்று சொல்லலாம். அந்தச்சமயத்தில் 1981 இல் விருதுநகர் மாவட்டம் மம்சாபுரத்தில் ஆசிரியர் வீரமணி தாக்கப்படுகிறார். அ.தி.மு.க எம்.எல்.ஏ தாமரைக்கனி மற்றும் அவனுடைய ஆட்கள் தாக்கினார்கள். இதற்கு ஏதாவது எதிர்வினையாற்ற வேண்டுமென்று முடிவு செய்கிறோம். பாரதி, கனகு, விசயராகவன், பொன்ராஜ் ஆகியோர் பொள்ளாச்சி அக்ரகாரத்திற்கு தீ வைக்கின்றனர். அப்போது தோழர்களுக்கு கையில் தீக்காயம் ஏற்பட்டது. கையில் உள்ள தீக்காயத்தால் வைத்து காவல்துறையில் சிக்கி கொள்கிறார்கள்.

1982 ஜுன். அந்தக் காலகட்டத்தில் பொள்ளாச்சி மகாலிங்கம் தொழில்நுட்பக் கல்லூரியில் ஆர்.எஸ்.எஸ் பயிற்சி வகுப்பிற்கு இடம் கொடுக்கிறார். உடனே நாம் மகாலிங்கத்தின் உருவ பொம்மையை எரிப்போம்னு அறிவித்தோம். தமிழர் பாது காப்புப்படை என்ற பெயரில் துண்டறிக்கை வெளியிட்டோம். ஆர்.எஸ்.எஸ்ஸின் பார்ப்பனியத்தை விளக்கியும் காந்தி படுகொலையில் ஆர். எஸ். எஸ் தொடர்பினை விளக்கியும் துண்டறிக்கை வெளியிட்டோம். திட்டமிட்டபடி போலீஸ் பாதுகாப்பை மீறி உருவபொம்மையை எரித்து விட்டோம். பாரதி, மனோகரன், கனகு, விசயராகவன் ஆகிய தோழர்கள் இப்போராட்டத்தில் இறங்கினோம்.

இதன் தொடர்ச்சியாக 1985 இல் அதே பொள்ளாச்சி மகாலிங்கம் 7 லட்சம் ரூபாய் செலவில் காந்திசிலையை நிறுவி சிலையில் அதன் திறப்பாளர் ஒரு 'அரிஜன சிறுமி' என்றும் எழுதிவைத்தார். நாங்கள் அதற்கும் 'மகாலிங்கமே பதில் சொல்' என்ற தலைப்பில் ஒரு கண்டனத் துண்டறிக்கை வெளியிட்டோம். அந்தத் துண்டறிக்கையைப் படித்த ஜமால்முகம்மது கல்லூரியின் பேராசிரியர் ஒருவர் காந்திசிலை திறப்புவிழா மேடையிலேயே பொள்ளாச்சி மகாலிங்கத்தைப் பார்த்து, ஒவ்வொரு கேள்வியையும் கேட்டு, இவற்றிற்குப் பதில் சொல்லாமல் நிகழ்ச்சி முழுமையடையாது என்று முடிக்கிறார்.

பொள்ளாச்சி மகாலிங்கம் உருவபொம்மை எரிப்புக்கு முன்பே ஆர்.எஸ்.எஸ் முதல் தலைவர் தேவரஸை மகாலிங்கத்தோட அப்பா நாச்சிமுத்து அழைத்து வந்து கூட்டம் நடத்தி இருக்கிறார். எனவே அதற்கு எதிர்வினையாற்றும் நோக்கில் அப்போதைய தோழர்கள் சிலர் நாச்சிமுத்துவின் உருவ பொம்மையையும் எரித்து கைதானார்கள் என்ற செய்தியையும் அறிந்திந்தோம்.

அன்றெல்லாம் எம்.ஜி.ஆர் ஆட்சியில் கோவை இரயில் நிலையத்தை 3 முறை சுக்கு நூறாக நொறுக்கியும் ஒரு வழக்குக்கூடக் கிடையாது. அன்று அடிக்கடி தோழர்கள் கொள்கைகளுக்கான வேலைகளைப்பற்றி கூடிப் பேசினோம். அவ்வப்போது சரியான எதிர்வினை ஆற்றினோம்.

**விடுதலைப்புலிகள் இயக்கத்திற்காகவும், ஈழவிடுதலைப் போராட்டங்களுக்காகவும் தாங்கள் செய்த பணிகள் என்ன?**

அக்ரகார தீவைப்புக்காக சிறையில் உள்ள தோழர்களுக்கு பெயிலுக்காக வேலை செய்து கொண்டிருக்கும் வேலையில் கோவை ஆறுச்சாமி அண்ணா என்னை அவசரமா வரச்சொல்ராரு அங்கே வந்தா 3 பேர் இருந்தாங்க. அவங்க சொல்லுகிற CIRCUIT- பல்பை எரிய வைக்க கேட்டாங்க. நான் சாதாரணமா பண்ண முடியும்னு சொன்னேன். எங்க கம்பெனில CONTRACT கொடுத்தா செய்து தருவாங்கனு சொன்னோம். அந்த 3 பேரில் ஒருவர் விடுதலைப்புலி அம்மான்.

1983 இல் இலங்கையில் கலவரம் வெடிக்கிறது. அப்ப நாம ஏதாவது பண்ணனும்னு இராமகிருக்கிருஷ்ணன் அண்ணன் சொல்லி கோவை உக்கடம் பஸ் ஸ்டேண்ட் இருக்கும் இடத்தில் கண்காட்சி நடத்துகிறோம். மோகன், சன்பாண்டியநாதன், ஊட்டி தாமோதரன் 3 பேரும் இதே வேலையாக இருக்கிறோம். இதனால் கம்பெனி வேலையை விட்டுட்டேன். நோட்டீசு தருவது, போஸ்டர் ஒட்டுவது என தொடர்ந்து செய்வோம்.

முத்துவும் சிவஞானமும் நானும் சேர்ந்து 'விடுதலைப்புலிகள்' என்ற பத்திரிகையை எடுத்துட்டு பஸ்ல ஏரி 2 ரூபாய்க்கு விற்போம். ஏன் என்றால் அப்போது புலிகளுக்கு எதிர்ப்பு இருந்தது. பொழைக்கு போனவங்கனு விமர்சனம் இருந்தது. கோவை இராமகிருஷ்ணன் தோட்டத்தில் விடுதலைப்புலிகள் தங்கிஇருந்தனர். அங்கிருந்த புலிகளில் ஒருவரை அழைத்துப் போய் மாலை நேரம் மில்களுக்கு முன்னால் பேசி உண்டியலில் பணம் வாங்குவோம். கண்காட்சிக்கு வந்து ஒப்படைப்போம்.

கண்காட்சிக்கு பின் ஒரு மேடையில் 2 டீமை மேடை ஏற்றுவார் இராமகிருஷ்ணன். விடுதலைப்புலிகளைப் பற்றி பேசுவார்கள். அங்கு ஒரு குறிப்பேடு வைப்போம் அதில் ஒவ்வொருவர் ஒரு கருத்தை எழுதுவார்கள். சிலர் மட்டும் முகவரியை எழுதுவார்கள். அவர்களைப்போய்ச் சந்தித்து உதவிகளைப் பெறுவோம். அன்றைய நிலையில் கம்யூனிஸ்ட் சிலரை ஆதரிக்கும். (நுஞசுஐகு)

நம்ம தி.க மட்டும் விடுதலைப்புலிகளை ஆதரிப்பது என சரியான முடிவெடுத்து ஆதரித்தோம். பின்பு காயக்கட்டு ஊர்வலத்தை நடத்துகிறோம். நான் அப்போது கலெக்டர் ஆபிஸில் பிரபாகரனுக்கு ஆபத்து என்றால் மூப்பனாரை வெட்டுவோம்னு ஒரு போஸ்டரைட் போட்டுட்டு நான் வந்துட்டேன் நைட் கண்காணிப்பில் இருந்த எல்லாரையும் போலிஸ் அள்ளிப்போட்டுட்டு போயிட்டாங்க.

- தொடரும்

வரலாறு

திருச்சியில் 'பிராமணாளுக்கு மாத்திரம்' என பல ஹோட்டல்கள் இருந்துள்ளன. இதனால் வெளியூரிலிருந்து திருச்சிக்கு வந்து படிக்கும் மாணவர்கள் பெரிதும் தொல்லைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் சென்னையில் சுயமரியாதை இயக்கத் தோழர்களால் 'தியாகராயர் க்ளப்' 'கால்டுவெல் சோற்றில்லம்' என்ற பெயர்களில் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் ஹோட்டல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவைபோல திருச்சியில் தெப்பக்குளம் அருகில் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கென்று தனியாக ஹோட்டல்கள் உருவாக்கப்படவேண்டுமென்று மாணவர்கள் தீர்மானம் நிறைவேற்றி குடி அரசில் வெளிவந்துள்ளன. 05.02.1928

---------13-ஆம் பக்க தொடர்ச்சி

அட்டவணை - 4: வெவ்வேறு தொழிற்பிரிவுகளில் உயர்ஜாதியினரும் மற்றவர்களும் பெற்றிருக்கும் பங்கு *(%)*

| | அதிகாரமும் செல்வாக்கும் | இடைநிலைப் | உடலுழைப்புப் |
|---|---|---|---|
| உயர் ஜாதியினர் | 75 | 36 | 8 |
| ஜாதிப்பெயர் கொண்டிருக் காதவர்கள் | 1 | 13 | 50 |
| மற்றவர்கள் | 24 | 51 | 42 |

நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட அரசுநிறுவனங்களை வைத்துப்பார்த்தால், இடைநிலைப் பணிகளில்கூட உயர்ஜாதியினர் தங்களுக்கு உரிய பங்கினைவிட அதிக இடங்களைப் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. அலுவலகக் காவலாளர், பியூன் போன்ற பணிகளுக்கு, எட்டாம் வகுப்புவரை தேர்ச்சி பெற்றிருந்தால்கூடப் போதுமானது தான். ஆனால் அரசுப்பணி என்பதிலேயே ஒரு கவுரவமும், ஒப்பீட்டிளவில் நல்ல சம்பளமும் அளிக்கக்கூடியது என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும். பெயரில் இருந்தே உயர்ஜாதியினர் என்று கண்டுகொள்ள முடிகிறவர்களை மட்டும் கணக்கிட்டால்கூட, இந்த இடைநிலைப் பணிகளில் 36 சதவிகிதம், அதாவது தங்கள் மக்கள் தொகை விகிதத்தில் இரண்டு மடங்கு அதிக எண்ணிக்கையில் அவர்கள் இடம் பெற்றிருக் கிறார்கள்.

சிறிதாவது உடலுழைப்பைக் கோருகிற பணியாக ஒன்று இருக்குமானால், உடனே அங்கே உயர்ஜாதிக்காரர்களின் எண்ணிக்கை என்பது கிட்டத்தட்ட இல்லாமல் போய் விடுகிறது. அங்கே பெரும்பாலும் தலித்துகளும் மற்றும் இதர பின்தங்கிய சமூகத்தினரும் மட்டுமே இருக்கிறார்கள்.

குறிப்பிட்டுச் சொல்வதென்றால், மாநகராட்சியில் வேலைப்பார்க்கிற 'தோம்' களைப் (Dome) பற்றிச் சொல்லலாம். மாநகராட்சிக்குள் செத்துப்போன விலங்குகளின் உடல்களை அப்புறப்படுத்துகிற வேலையைச் செய்கிறவர்களுக்குப் பெயர் 'தோம்கள்' அல்லது 'தோம்' என்கிற ஜாதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அந்த வேலையைச் செய்கிறார்கள் என்றும் சொல்லலாம். இந்தப் பணியைச் செய்பவர்கள் என்ன ஜாதியாக இருப்பார்கள் என்று தேடிக்கண்டுபிடிக்க வேண்டிய அவசியமே இல்லை.

- தொடரும்


Ankita Aggarwal, Jean Dreze, Aashish Gupta - Economic & Political Weekly 07.02.2015

தமிழில் : யாழ்மொழி

# உலகமயமாகிறது யோகா மோசடி



## ஜூன் 21 சர்வதேச யோகா தினம் ஐ.நா. அறிவிப்பு



ஐக்கிய நாடுகள் சபை ஜூன் 21-ஆம் தேதியை சர்வதேச யோகா தினமாக அறிவித்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி, கடந்த செப்டம்பர் மாதம் ஐ.நா. சபையில் பேசியபோது, யோகாவுக்காக சர்வதேச தினமாக ஒருநாளை அறிவிக்க வேண்டும் என்று கோரியிருந்தார். இந்நிலையில், ஐ.நா.வுக்கான இந்தியத் தூதர் அசோக் முகர்ஜி, யோகாவுக்கான சர்வதேச தினம் குறித்த தீர்மானத்தை ஐ.நா. சபையில் வியாழக்கிழமை கொண்டு வந்தார். இந்தத் தீர்மானத்துக்கு,175 நாடுகள் ஆதரவளித்தன.

வரும் ஜூன் 21-ம் தேதி சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் யோகா நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு இந்திய தூதரகம் ஏற்பாடு செய்து வருகிறது. இதில் ஒருபகுதியாக அமெரிக் காவிலுள்ள வாஷிங்டனில் ஆன்மிக குரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், ‘யோகா மற்றும் தியானத்தின் மூலம் அமைதியைப் பேணுதல்’ என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார். ஒரு நாள் முழுக்க நடைபெறும் நிகழ்ச்சியை, பல்வேறு யோகா அமைப்புகள், பயிற்சியாளர்கள், சமூக அமைப்புகளுடன் இணைந்து இந்தியத் தூதரகம் திட்டமிட்டு வருகிறது.

அறிவியல், மருத்துவம் என்ற போர்வையில் பார்ப்பனப் பண்பாட்டைத் திணிக்கும் இம்முயற்சியை அறிவியலாளர்களும் அறிவியல் பண்பாட்டைக் கடைபிடிப்பவர்களும் கடுமையாக எதிர்க்க வேண்டும். இந்நிலையில் நிர்முக்தா என்ற இணையதளத்தில் வெளியான ‘யோகா என்ற பெயரில் நடக்கும் மூடநம்பிக்கைகள்’ குறித்த கட்டுரை தமிழாக்கம் செய்து வெளியிடுகிறோம்.

**யோகா என்னும் மாயை – வி.என்.கே.குமார்**

பீகார் மாநிலம் முங்கரில் உள்ள “பீகார் யோகா பள்ளி (Bihar School of Yoga)” யோகா ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுனர்களுக்கான ஓர் உலகத்தரம் வாய்ந்த யோகா நிறுவனமாகும். இந்தியாவில் ஏதேனும் ஒன்றைக் கற்றுக்கொண்டு, தங்கள் நாட்டிற்குச் சென்று அதைக் கட்டணத்துடன் மற்றவர்களுக்குப் பயிற்றுவிக்கும் வெளிநாட்டவர்களுக்கு மைசூர் இரண்டாவது இடமாக உள்ளது. அவ்வெளி நாட்டினர் தாங்கள் நம்பிக்கையான ஓர்இடத்தில், யோகாவின் அறிவியலைக் கற்றுக்கொள்வதாகக் கூறுகின்றனர். எந்தநேரம் சென்றாலும் மைசூரில், யோகா கற்றுக் கொள்ளவந்திருக்கும் 250 முதல் 300 வெள்ளையர்களைப் பார்க்கலாம்.

**எனது குடும்பத்தில்யோகா ..**

என் மனைவி பிரேமா 15 ஆண்டுகளாக, பிராணயாமா செய்துவருகிறார். அது தன்னை ஆசுவாசப்படுத்துகிறது என்றும், தான் பதற்றமடைவதைக் கட்டுப்படுத்துகிறதென்றும் நினைக்கிறார். ஆனால் அவர் யோகாவை மட்டுமே உடற்பயிற்சியாக மேற்கொள்ள நினைக்கிறார் என்பதை அறிந்தபோது அதிர்ச்சியடைந்தேன்.

**கலந்துரையாடல்:**

**பிரேமா:** பெண்கள் சங்கத்திலிருக்கும் ஒரு பெண், நிறைய பெண்களுக்கு யோகா சொல்லித் தருகிறார். நானும் அவ்வகுப்பில் இணைய விரும்புகிறேன்.

**நான்:** *(சற்று கோபத்துடன்)* உன்னை நீயே முடிச்சுப் போட்டது போலக் கட்டிக்கொண்டு, முகத்தை அகோரமாக வைத்துக்கொண்டு செய்யும் யோகாவைவிட நடைப்பயிற்சி (Walking) அதிக நன்மைகள் அளிக்கும்.

**பிரேமா:** இல்லை இல்லை. நான் காலையில் யோகாசனங்களையும், மாலையில் நடைப்பயிற்சியையும் செய்வேன்.

**நான்:** மைசூரில் மாலை நேரங்களில் எப்போதும் மழைபெய்து கொண்டிருக்கிறது. இங்குள்ள பெரும்பாலான பெண்களைப்போல, நீயும் காலையில் யோகா செய்து விடுவதால் நடைப்பயிற்சியைத் தவிர்த்தால் ஒன்றுமில்லை என்று சொல்லி விடுவாய்!! மேலும் ஆசனங்கள் செய்யும்போது நிறைய நரம்பாற்றல் (NERVOUS ENERGY) செலவிடப்படும். அதனால், மாலையில் நடப்பதற்கான ஆற்றல் இல்லாமல் கூட போகலாம்.

**பிரேமா:** ஆனால், யோகா ஒரு முழுமையான உடற்பயிற்சி என்றும், அது புற்றுநோய் உள்ளிட்ட அனைத்து நோய்களையும் தடுக்கும் என்றும் என்னிடம் சொன்னார்களே?

**நான்:** யோகா 5000 ஆண்டுகட்கு முன் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டது. பெரும்பாலான ஏமாறக்கூடிய இந்தியர்களிடம் "பழமை பொன்போன்றது (Old is Gold)" என்ற நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கையும், அவர்களின் தேசப்பற்றும், பதஞ்சலி போன்ற முன்னோர்களிடம் அவர்களுக்கிருக்கும் விசுவாசமும்தான் அவர்களை "யோகா அனைத்து நோய்களையும் தீர்க்கும் சக்தியுடையது" என்று நம்பச்செய்துள்ளது. குண்டலினி சக்தியைத் தூண்டுவதாகச் சொல்வதும், பல்வேறு சக்கரங்களும் (Chakras) அபத்தமானவை. யோகாவை மட்டுமே உடற்பயிற்சியாக நாம் செய்துவந்தால், அது ஆபத்தானதும் கூட.

**பிரேமா:** அது எப்படி??

**நான்:** நாம் தூக்குதல், தள்ளுதல், குத்துதல், அழுத்துதல், நடனமாடுதல், நடைப்பயிற்சி, ஜாகிங் போன்ற எந்த நடவடிக்கைகளில் ஈடுபடும்போதும், நம் தசைகள் சுருங்கும். உதாரணமாக, 5 அங்குலம் உள்ள ஓர்தசை உடற்பயிற்சியின் போது 4.8 அங்குலமாகச் சுருங்கும். அதன்பின், நாம் சாந்தமாகும்போது, மீண்டும் அந்தத்தசை, அதன் இயற்கையான அளவான 5 அங்குலமாகும். அந்த இயற்கையான 5 அங்குல நீளம்தான் தசையை ஆரோக்கிய மாகவும், மீள்தன்மையுடனும் வைத்துக் கொள்வதற்கு ஏற்றதாகும்.

நடைப்பயிற்சி, ஜாக்கிங், ஏரோபிக்ஸ், வண்டியோட்டுதல் *(Biking)* போன்ற உடற்பயிற்சிகளுக்குப் பின் நம்மைச் சாந்தப்படுத்திக் கொள்ள யோகாவைப் பயன்படுத்தலாம். ஆனால் நம்மைச் சாந்தப்படுத்திக் கொள்ளவும் யோகா மட்டுமே தீர்வல்ல. அதற்கும் கிரேக்க கெலிஸ்தெனிக்ஸ் *(Greek calisthenics)*, டாய்சீசுவான் *(Tai chi chuan)*, பிசியோதெரபிஸ்ட்கள் மற்றும் விளையாட்டு மருத்துவர்கள் *(Sports medicine doctors)* கற்றுத்தரும் பயிற்சிகள் என்பன போன்ற யோகவைவிட அறிவியல்பூர்வமான பல பயிற்சிகள் உள்ளன.

**பிரேமா:** ஏன் யோகாவை மட்டுமே உடற்பயிற்சியாகச் செய்யக்கூடாது??

**நான்:** மறுபடியும் 5 அங்குலம் நீளமான தசையையே உதாரணமாக எடுத்துக் கொள்வோம். நீ ஏரோபிக்ஸ் போன்ற எந்த உடற்பயிற்சியையும் செய்யவில்லை என வைத்துக்கொள்வோம். எனவே தசை 5 அங்குலமாகவே இருக்கும். அப்படி இருக்கும்போது யோகா செய்கிறாயெனில் அந்தத்தசை 5.2 அங்குலமாகும். இவ்வாறு, சிறுது நாட்களாக யோகாசனங்களை மட்டுமே செய்துவந்தால், அந்தத் தசை 5.3 அல்லது 5.4 அங்குலமாகக்கூட நீளும். நான்முன்பே குறிப்பிட்டதுபோல், இயற்கையான 5 அங்குல நீளம்தான் தசையை ஆரோக்கியமாக, மீள்தன்மையுடையதாக வைக்கும்.

இப்போது தசை நீளமாவதால், அது ஆரோக்கியமற்றதாகும். தசைநார் மீண்டும் ஆரோக்கியமான 5 அங்குல நீளத்திற்கு வரமுடியாததால், நம் பழைய திறனோடு நம்பணிகளைச் செய்யமுடியாமல் போகும். ஆக்டோபசைப் போன்ற நெகிழ்வுத்தன்மை *(Flexibility)* உனக்கு இருந்தாலும், குறைவான வலிமையும், சகிப்புத்தன்மையுமே உன்உடலில் இருக்கும்.

**பிரேமா:** யோகா எல்லா நோய்களையும் குணப்படுத்தும் என்று அவர்கள் ஏன் சொல்கிறார்கள்??

**நான்:** நோய்களைத் தடுக்கவும், குணப்படுத்தவும் நடைப்பயிற்சி, ஜாக்கிங், நீச்சல் மற்றும் வண்டியோட்டுதல் போன்ற இருதய

இரத்தநாள ஏரோபிக் பயிற்சிகளால் முடியும். இதை மருத்துவ ஆய்வேடுகள் நிரூபித்துள்ளன.

**ஏரோபிக்ஸ் பயிற்சியின் நன்மைகள்:**

எல்.டி.எல் கொழுப்பைக்குறைத்து (LDL Cholestrol), HDL கொழுப்பு (HDL Cholestrol) மற்றும் இன்சுலின் உணர்திறனை (Insulin Sensitivity) அதிகரிப்பதால் இதய செயல்பாடு மற்றும் நுரையீரலின் பிராணவாயு உட்கொள்ளும் திறன் (VO2 max Lung capacity) ஆகியவற்றை மேம்படுத்தும்.

இரத்த அழுத்தம் மற்றும் உடல் கொழுப்பைக் குறைக்கும்.

இருதயத்தைச் சுற்றியுள்ள தமனிகளின் (coronary Arteries) இரத்த ஓட்டத்தை மேம்படுத்தும். பிரதானத் தமனிகளில்40%-லிருந்து 50% வரை அடைப்பு ஏற்பட்டாலும்கூட ஏரோபிக்ஸ் பயிற்சி செய்பவரால் வாழமுடியும். ஏனெனில் அப்பயிற்சி குறுகிய தமனிகளுக்கு அப்பால் இயற்கையாகப் புறவழி நுண் குழாய்களை (Bypass capillaries) உருவாக்குகிறது.

**வலுவேற்றும் உடற்பயிற்சிகளின் நன்மைகள்:**

நம் உடலின் மேல்தசைகளை வலுப்படுத்தும்போது, அது தானாகவே நம் அடிப்படை வளர்சிதை மாற்ற விகிதத்தை (Basal Metabolic Rate) அதிகரிக்கும்.

துணை சருமக்கொழுப்பிழைய திசுக்களில் (sub-cutaneous adipose tissues) அல்லது உள்ளுறுப்புப் பகுதிகளிலுள்ள உடல் கொழுப்பு என்பது ஓர் இறந்த திசு (Dead tissue) தான். ஆனால், தசைகள் என்பது தமனிகள், இரத்த நுண்குழாய்கள், நரம்புகள் ஆகியவற்றோடு கூடிய உயிர்ப்புடன் இருக்கும் திசு. எனவே நாம் ஒன்றும் செய்யாமல் இருக்கும் போதுகூட கலோரிகளை இழந்து கொண்டு தான் இருப்போம். அதனால், BMR அதிகமாக இருந்தால், ஒன்றும் செய்யாமல் அமர்ந்து கொண்டிருக்கும் போதும், தூங்கும் போதும்கூட நமது உடல்கொழுப்பைக் குறைக்க உதவும்.

நாம் உடற்பயிற்சி செய்யும்போது, நம் தசைகள் சுருங்கி, மூட்டுகளையும் தசைநாண் களையும் (Tendons) இழுக்கும். எலும்புகள் அழுத்தத்திற்குள்ளாகும். எலும்புகள் அழுத்தத் திற்குள்ளாகும்போது, நிறைய எலும்புசெல்கள் (Bone Cells) உருவாகும். ஆதலால், எலும்பு களிலுள்ள தாதுக்களின் அடர்த்தி (BMD: Bone Mineral Density) அதிகரிக்கும். எனவே நாம் காயங்களுக்குள்ளாகும் போது, ஆஸ்டியோ போரோசிஸ் (Osteoporosis) மற்றும் எலும்பு முறிவுகள் வராமல் தடுக்கிறது.

யோகாசனங்களில், வலுவேற்றும் தன்மையும், இருதய - இரத்த நாளங்களுக்கான நன்மைகளும் வெறும் 10% மட்டுமே உள்ளது. (அதுவும் தன்னைத் தானே உயர்ந்தவர் என்று கற்பனை செய்து கொள்ளும் பாபாஇராம் தேவால் மட்டுமே செய்யமுடிகிற, தனது வகுப்புகளிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சி களிலும் செய்துகாட்டும் கடுமையான ஆசனங்களைச் செய்தால்தான் முடியும்). யோகாசனங்களில் தசைகளை நீட்டிக்கும் திறன் 80% உள்ளது.

**பிரேமா:** பிராணயாமா பற்றி சொல்லுங்கள்

**நான்:** அது நுரையீரலின் பிராணவாயு உள்ளெடுக்கும் திறனை அதிகரிக்கிறது. இரத்த சிவப்பு அணுக்களிலுள்ள பெரும்பாலான ஹீமோகுளோபின் மூலக்கூறுகளுக்கு பிராணவாயுவை அளிக்கும். ஆனால், அதிவிரைவான இரத்த ஓட்டம் ஏற்பட்டால் மட்டுமே,1600 கி.மீ. நீளமான நம் இரத்தக்குழாய்கள் வழியாக, பிராணவாயுவுடன் கூடிய அந்த இரத்தம், நம் உடலிலுள்ள டிரில்லியன் கணக்கான செல்களை அடைய முடியும்.

ஆனால் அது சாத்தியமல்ல. எனவே பிராணயாமா நம் உடலுக்கு அவ்வளவு நன்மைகளை அளிக்க முடியாது. அதேசமயம், நாம் சுறுசுறுப்பான நடைபயிற்சி, ஜாகிங், நீச்சல் அல்லது வண்டியோட்டுதல் போன்ற உடற்பயிற்சிகளைச் செய்தால், நம்இரத்த அழுத்தம், இதயத்துடிப்பு, சுவாசிக்கும் விகிதம் போன்றவை அதிகரிக்கும். எனவே, பிராணவாயுவுடன் கூடிய இரத்தம் நம் உடலில் உள்ள டிரில்லியன் செல்களையும் அடையும்.

**பிரேமா:** அப்படியென்றால், நீங்கள் யோகாசனங்கள் மற்றும் பிராணயாமா அறிவியல் அடிப்படை அற்றவை என்று சொல்கிறீர்களா?

**நான்:** ஆம், நீங்கள் 8- 10 வயதிலேயே அவற்றைத் தொடங்கினால் ஒழிய... அவ்வாறு 8-10 வயதி லேயே செய்யத் தொடங்கினால், தசைகள், தசைநாண்கள், தசைநார்கள் மற்றும் முதுகெலும்பு ஆகியவை நெகிழ்வான தன்மையோடு விளங்கும். தொடர்ந்து செய்து வந்தால், மூட்டின் இயக்கம் மற்றும் முதுகெலும்பு, தசைகளின் நெகிழ்வுத் தன்மையைப் பேணமுடியும்.

ஆனால், பெரும்பாலும் முடக்குவாதம் (Arthritis), லும்பகோ (Lumbago), ஸ்பாண்டைலோசிஸ் (Spondylosis) போன்ற

நோய்களால் அவதிப்படும் 50 வயதிற்கு மேலுள்ளவர்களே யோகா செய்கின்றனர். ஒன்றுமே செய்யாமல் இருப்பதைவிட எதையாவது செய்வது சிறந்ததன்றோ!! அப்படிப் பார்க்கும்போது, யோகா செய்வது அவர்கள் மூட்டுகளின் இயக்கத்தைச் சற்றுமேம்படுத்தும். அதே போல், யோகாவிலுள்ள பிராணயாமா மற்றும் தியானம் போன்ற அம்சங்கள் நம்மை மன அழுத்தத்திலிருந்து விடுவித்து ஆசுவாசப்படுத்தும்.

ஆனால் இளைஞர்கள் யோகா செய்தால், பெரும்பாலான யோகாசனங்கள் அவர்களின் உடல்நலத்தை மேம்படுத்தாமல், நிறைய பிரச்சனைகளை ஏற்படுத்தி, நோய்வாய்ப்பட வைக்கலாம். உதாரணமாக, தரையில் அமர்ந்துகொண்டு, ஒருகாலை மடித்துக்கொண்டு மற்றொருகாலை முட்டியை மடக்காமல்நீட்டி, கால்விரல்களைத் தொடமுயற்சிக்கும் போது, கீழ்முதுகுப் பகுதியிலுள்ள சோவஸ் தசைகளில் (Soas muscles) சுளுக்கு ஏற்படும். அவ்வாறு செய்வது அறிவியலுக்குப் புறம்பானது. அவ்வாறான பல பயனற்ற யோகாசனங்கள் உள்ளன.

பிரேமா: பின் எப்படி அமெரிக்கர்கள், ஆங்கிலேயர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் தங்கள் உடல்நலத்திற்கென்று யோகா செய்கிறார்கள்? அவர்கள் அனைவரும் முட்டாள்களா?

நான்: கிறித்துவ சமய, இவாஞ்ச்லிக்கல் (Evangelical) யோகா ஆசிரியர்களாலும், அயல்நாடான இந்தியாவில் ஏதேனும் ஒன்றைக் கற்றுக்கொள்வதிலிருக்கும் சிலிர்ப்பு காரணமாகவும், பிரபலமான பல ஹாலிவுட் நடிகர்கள் யோகாவைப் பரிந்துரைப்பதாலும் அவர்கள் கவரப்படுகிறார்கள். மேலும் யோகா ஆசிரியர்கள் எப்போதும் சிரித்த முகத்தோடுள்ளனர். (அவர்கள் சிரிப்பது தங்கள் வங்கிக் கணக்குகளைப் பெருக்கிக்கொள்வதற்கு என்பதன்றோ உண்மை!)

# ஜாதி ஒழிப்பு நடவடிக்கைகள்

திருச்சியில் 17.12.1927 இல் நடந்த மருத்துவர் குல சங்கத்தின் ஆண்டுவிழாவில் மநுசாஸ்திரத்தைச் சுட்டெரிக்க வேண்டுமென்று தீர்மானம் போடப்பட்டது. தமிழ்நாட்டின் பல ஊர்களிலும் மருத்துவர்குல சங்கங்களின் மாநாடுகளிலும். கூட்டங்களிலும் மனுசாஸ்திரத்தையும் வேதங்களையும் எரிக்க வேண்டு மென்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குடி அரசு 22.01.1928

அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் மாநாடு எம்.சி.ராஜா தலைமையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் மனுசாஸ்திரத்தைப் பறிமுதல் செய்யவேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. பர்மாவில் இரங்கூனில் தனவணிகர் மாநாடு நடைபெறுகிறது. அதில்ஜாதிவேறுபாடுகளுக்கு எதிராகவும், தீண்டாமைக்கு எதிராகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குடி அரசு 04.03.1928, 19.03.28

திருச்சி பெரிய கடைவீதியில் உள்ள ஒரு பார்ப்பனரின் ஹோட்டலில் பிராமணாளுக்கும், சூத்திராளுக்கும் தனித்தனி இடவசதி உண்டு' என்று பலகை இருந்தது. பூவாளூர் சுயமரியாதை இயக்கத் தலைவர் செல்வகணபதி தலைமையின் அந்தக் கடைக்கு எதிராகப் போராட்டம் நடந்தது. 'சூத்திராள்' என்ற பெயர் நீக்கப்பட்டு 'இதறாள்' என மாற்றப்பட்டது. குடி அரசு 22.01.1928

நெல்லை மாவட்டம் கடையநல்லூரில் சுகாதார வார ஊர்வலம் என்ற பெயரில் அரசே ஒரு ஊர்வலம் நடத்துகிறது. அந்த ஊர்வலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களும் பங்கேற்றனர். எனவே தாழ்த்தப்பட்ட மக்கள் பங்கேற்கும் ஊர்வலம் பார்ப்பனர்களின் தெரு வழியாக வரக்கூடாது என பார்ப்பனர்கள் எதிர்த்தனர். அவர்களை எதிர்த்துப் போராடியது சுயமரியாதை இயக்கம். குடி அரசு 11.03.1928

## இரயில் நிலையங்களில் பிராமணாள் - இதறாள் ஒழிப்பு - 1941

இரயில் நிலையங்களில் உள்ள உணவு விடுதிகளில் பார்ப்பனர்களுக்கு தனி உணவுக் கூடம், தனி உணவு, தனி பாத்திரங்கள் எனவும், மற்ற மக்கள் அனைவரையும் “இதறாள்” என அறிவித்து, அவர்களுக்கு தனி இடம், பாத்திரங்கள் என தீண்டாமை தலைவிரித்தாடியது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமல்ல, உயர்ஜாதிப் பெருமையில் இருக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இதே நிலைதான். 1941 ஆம் ஆண்டு அதைக் கண்டித்து பெரியார் ஒரு அறிக்கை வெளியிட்டார். தொடர் போராட்டங்களை நடத்தப்போவதாக அறிவித்தார். உடனேயே இரயில்வேநிர்வாகம் தமது உணவு விடுதிகளில் நிலைநிறுத்தி வந்த தீண்டாமையை முடிவுக்குக் கொண்டுவந்தது. 20.3.1941 இல் இரயில்வே ஒரு ஆணை மூலமாக பிராமணாள் - இதறாள் தீண்டாமை நீக்கப்பட்டது.

# மனுதர்மமும், ஆரிய தர்மமும் இணைந்தது தான் சிலப்பதிகாரம்!

தோழர் பெரியார்

## கண்ணகிக்குச் சிலை வைத்தது பெண்களைக் கேவலப்படுத்துவதாகும்!

பெண்கள் ஆண்களுக்கு அடிமையாக இருப்பதற்கென்றே பிறப்பிக்கப் பட்டவர்கள். அவர்கள் உரிமையோடு ஆண்களுக்குச் சமமாக வாழக் கூடாதவர்கள் என்பதை வலியுறுத்தத் தான் நம்முடைய இலக்கியங்கள் என்பவைகள் இருக்கின்றன.

நம் அரசு கண்ணகிக்குச் சிலை வைத்தது நம் சமுதாயத்தை -குறிப்பாகப் பெண்கள் சமுதாயத்தைக் கேவலப்படுத்துவதாகும் என்று குறிப்பிட்டேன்.ஏன் இப்படிக் குறிப்பிடுகின்றேன் என்றால், எதற்காக ஒரு பெண், தன் கணவன் இன்னொரு பெண்ணுடன் போனதற்காக உணவருந்தாமல், பாயில் படுக்காமல் இருக்க வேண்டும்? இது மடத்தனத்தைக் காட்டுகிறதே தவிர, கற்பைக் காட்டுவதாக இல்லை.

எந்த ஆணும் தன் மனைவி இன்னொரு வனுடன் சென்றுவிட்டாள் என்பதற்காக எவனாவது உணவருந்தாமல், பாயில் படுக்காமல் இருக்கின்றானா? இருந்திருக்கின்றானா? என்றால் கிடையாது. மனைவிக்குக் கொஞ்சம் உடல் நிலை நலம் இல்லை என்று தெரிந்தாலே ஆண்கள் வேறு பெண்ணைத் தேட ஆரம்பித்து விடுகின்றனர். கண்ணகிக் கதை பெண்களை மடைச்சியாக்கப் பயன்படுமே தவிர, அறிவு வளர்ச்சிக்குப் பயன்படாது.

தமிழகத்தில், கற்புடையவள் கண்ணகி - அவளைப் பின்பற்றி அவளை வழிகாட்டியாகக் கொண்டு பெண்கள் வாழ வேண்டும் என்றால், தமிழகத்திலிருக்கிற மூன்று கோடி பெண்களில் கண்ணகி ஒருத்தி தான் கற்பு உடையவள் என்றால், மற்றப் பெண்கள் எல்லாம் விபசாரிகள் என்பதுதானே பொருள். இதை மானமுள்ள எவனும், அறிவுள்ள எவனும் ஒத்துக் கொள்ள முடியாதே. எதற்காக ஒரு பெண் ஆணிற்கு அடிமையாக இருக்க வேண்டும்? அதற்கு என்ன அவசியம் என்பதை சிந்திக்க வேண்டுகிறேன்.

*( 09.03.1969 அன்று பூதலூரில் நடைபெற்ற திருமணத்தில் தோழர் பெரியார் அறிவுரை - ‘விடுதலை’,17.03.69)*

## சிலப்பதிகாரம் தேவடியாளுக்குச் சமமானது!

இப்போது நமது இந்த வகை பிரசாரத்தால் பாரத, ராமாயண, மனு தர்ம சாஸ்திரங்களுக்கும் மதிப்பு குறைந்து விட்டதால் மனுதர்மத்தையும், ஆரிய தர்மத்தையும் பெரிதும் கொண்ட சிலப்பதிகாரத்தைத் தலையில் தூக்கிக் கொண்டு ஊரூராய் திரிந்து பிரச்சாரம் செய்ய ஒரு கூட்டம் கிளம்பியிருக்கிறது. இந்தச் சிலப்பதிகாரம் எப்படி அமைந்திருக்கிறது என்றால் ஆபாச மூட நம்பிக்கை, ஆரியக் கருத்துகளை உட்கருத்தாகக் கொண்டு நல்ல தமிழ் அமைப்பை உடையாகக் கொண்டு தேவடியாளுக்குச் சமமாக அதாவது தேவடியாள் எப்படி பார்ப்பதற்கு அலங்காரமாக இருப்பாளோ, ஆனால் உள்ளே போய்ப் பார்த்தால் உள்ளமெல்லாம் வஞ்சகம் நிறைந்தும் உடலெல்லாம் நோய் கொண்டும் உடையால், அணியால் மக்களை ஏய்த்துப் பிழைத்துக் காணப்படுவாளோ அது போலதான் இந்த சிலப்பதிகாரமுமாகும். பாரத ராமாயணம் போல் அது நாவல் சித்திரக்கதை. அதுவும் குறிப்பிட்ட கொள்கை இல்லாமல் எழுதின கதை.

ஆரியம் தலை தூக்கி நம் அரசர்கள் ஆரியத்திற்கு அடிமைகளாய், தாசர்களாய் இருந்த காலத்தில் பகுத்தறிவும் இன உணர்ச்சியும் இல்லாமல் சித்தரித்த கதையாகும். மூடநம்பிக்கைக் களஞ்சியம்; ஆரியக் கோட்டைக்கு அரண். இப்படிப்பட்டதை, ‘தமிழர் பண்புக்கு’ என்று பிரசாரம் செய்தால் இது மானமுடைமை ஆகுமா? ஆதிமுதல், அந்தம் வரை பார்ப்பானை பார்ப்பனியத்தைப் புகுத்தி அமல்படுத்த வேண்டும்; எப்படி எப்படி நாம் நடக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

நான் ஒன்றும் பயந்து கொண்டு பேசுகிறேன் என்றோ,பொய் பேசுகிறேன் என்றோ நினைக்க வேண்டாம்.

போன ஜன்மம், வருகிற ஜன்மம் என்று தலைவிதியைக் காட்டி மனிதனை எப்படிப்பட்ட இழிவுக்கும் ஆளாகச் செய்கிறது. பார்ப்பான் சொல்லுகிறபடி, அவன் எது கேட்டாலும் எடைக்கு எடை தங்கம் கொடுக்க வேண்டு மென்று சொல்லுகிறது. ஆரூடம், ஜோதிடம், பில்லி சூனியம் ஆகியவற்றைப் பற்றிச் சொல்லுகிறது. முட்டாள்தனமாக கற்பையும் பெண் அடிமையையும் பெருமைப்படுத்துகிறது.

கோவலனை அரசன் தண்டித்த மாதிரி நம் நாட்டு ராஜாக்களுக்கே ரொம்பவும் அவமானம் தருவதாகும். ராஜா வீட்டு சிலம்பு எங்கோ போய்விட்டது. கோவலன் சிலம்பு வைத்திருப்பது ராஜாவினுடையது என்று பொய்க்குற்றம் சாட்டப்பட்டதன் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாத அரசன் கோவலனை வெட்டிக் கொல்லச் சொல்லுகிறான். கோவலன் இறந்து போகிறான். இதையறிந்த அம்மாள் கண்ணகிக்குப் பெருங்கோபம் வந்து நிரபராதிகளான மதுரை மக்களைச் சுட்டுச் சாம்பலாக்கினாள்.

இந்த அம்மாளின் கற்பைப் பற்றிச் சொல்லுவதாய் இருந்தால், தேவடியாள் வீட்டிற்குக் கணவன் போனதை அறிந்த கண்ணகி அந்தத் தேவடியாளை ஏதாவது செய்திருக்க வேண்டும். தாசி மாதவி, கோவலன் கண்ணகியின் கணவன் என்று தெரிந்து அவனை அனுபவிக்கிறாள். தேவடியாளுக்கு இதுவா தர்மம்? அப்படிப் பட்டவளுக்குக் கண்ணகி பொருள் கொடுத்து வசதி செய்யலாமா? கோவலன் ஒழுக்கமற்றவன்; கண்ணகி புத்தியற்ற மடப்பெண். அகலிகை, சீதை, துரோபதை, தாரை எல்லாம் கற்புக்கரசிகளாய் இருக்கும்போது, கண்ணகி கற்புக்கு மாத்திரம் முட்டாள்தனம் வேண்டுமா?

மற்றும் இந்த அம்மாளுக்குக் கோபம் வந்ததும், தன் மார்பைத் திருகி எறிகிறாள். இது என்ன புத்தி? மார்பைக் கையில் திருகினால் வந்துவிடுமா? இந்தப்படி நடந்த சங்கதியும், அனுபவமும் சிலப்பதிகாரம் தவிர வேறு எதிலும் எங்கும் காணக் கிடைக்கவில்லை. அந்தப்படி திருகிப் பிடுங்கின மார்பு (முலை) வீசி எறிந்தால் அது நெருப்புப் பற்றிக் கொள்ளுமா? அதில் பாஸ்பரம் இருக்குமா? இந்த மூட நம்பிக்கைக் கற்பனையானது என்ன பயனைக் கொடுக்கிறது? இதனால் கண்ணகிக்கு வீரம் இருந்ததாகக் காட்ட முடியுமா?

அக்கினி பகவானுக்குக் கண்ணகி "பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்களைச் சுடு" என்று கட்டளையிட்டாளாம், மதுரை நகரம் சாம்பலாயிற்றாம்; இதுதான் கண்ணகி கற்பின் பெருமையா? அக்கினி பகவானுக்கென்ன புத்தி வேண்டாமா? ஒரு பெண் பிள்ளை முட்டாள்தனமாக உளறினால் நிரபராதிகளைச் சுடலாமா? ஒரு பட்டணத்தைக் கொளுத்தலாமா என்கின்ற அறிவு வேண்டாமா? பார்ப்பனர்களை எதற்காக மீதி விடவேண்டும்.

ஆகவே வர்ணாச்சிரம தர்ம மனுநூல், இராமாயண - பாரதத்திற்கும் இதற்கும் என்ன பேதம்? இராமன் பார்ப்பனன். ஆக சூத்திரனைக் கொன்றான் என்பது இராமாயணம். பார்ப்பானை மட்டும் காப்பாற்ற வேண்டு மென்பது சிலப்பதிகாரம். எவ்வளவு முட்டாள்தனமாக கொடுமை செய்தாலும் பார்ப்பனர்களைக் காப்பாற்றினால் அவள் பதிவிரதை ஆகிவிடுவாள் என்பது சிலப்பதிகாரம். பாண்டியன் விசாரணை செய்து அவனுக்குக் கிடைத்த உண்மை மீது கோவலனுக்குத் தண்டனை விதித்தான். ஆனால் கண்ணகி ஒரு விசாரணையும் செய்யாமல் ஒரு குற்றமும் காணாமல் நிரபராதிகளாக மக்களை, பெண்களைச் சுட்டு எரித்துக் கொன்றாள். இவள் கற்புக்கரசி, வணங்கத்தக்கவள், தெய்வமானவள். பாண்டியன் 'குற்றவாளி' இதுதானே சிலப்பதி காரக் கதை. இதுதான் தமிழர் பண்பாம். இதற்கு மாநாடாம்!

எவ்வளவு முட்டாள்தனம், இந்த மாதிரியான ஆபாசமும், அநீதியும் நிறைந்து இருக்கும் கதைகளை நாம் வைத்துக் கொண்டு நமக்குச் சொந்தம் என்று சொல்லுவது? இவற்றைத்தான் நாம் ஒழிக்க வேண்டுமென்று சொல்லுகிறோம்; சமுதாயத்திற்கு உதவாக்கரை என்று ஒதுக்கி வைக்கிறோம்.

ஆனால் மாநாடு கூட்டும் அன்பர்களோ பார்ப்பானிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு, அவன் பிச்சை என்று இடும் பச்சை நோட்டுகளுக்காகப் பிரச்சாரம் செய்கிறார்கள், இந்தப் பச்சோந்திகள். மற்றும் இவர்கள், கண்ணகிதான் கற்புடையவள் என்று கூறுகிறார்கள்; அப்பொழுது மற்றவர்கள் எல்லாம் கற்பில்லாதவர்களா? இது மனிதத் தன்மைக்கே பொருத்தம் இல்லை. ஆனால் அந்த மாதிரி நடந்ததை நாம் பார்த்து இருக்கவும் முடியாது.

இந்தக் கதையைச் சொல்லி நம் பெண்களெல்லாம் கண்ணகிகளாகத் திகழவேண்டும், அவள்போல் கற்புக்கரசியாக வேண்டும் என்று பிரச்சாரம் செய்கின்றவர்களின் பிள்ளைக் குட்டிகள் முதலாவது இந்த மாதிரி நடந்தால் பொறுப்பாளர்களா? என்று கேட்கிறோம். இந்தப் பிரசார பிரம்மாக்களின் மாப்பிள்ளைமார்கள் தேவடியாள் வீட்டில்போய் இருந்தால், இவர்கள் பெண்கள் தாசி வீட்டிற்குப் பணம் நகை எல்லாம் அனுப்ப சம்மதிப்பார்களா? இப்படி நடந்தால் ஆண்கள் ஒழுக்கம் உள்ளவர்களாக ஆவார்களா? இது ஒழுக்கத்தைக் கற்பிக்கும் நூல் ஆகுமா?

ஆகவே, இது போன்ற கதைகள் பெண்களுடைய அடிமைத்தனத்திற்கு அடிகோலுதலாகவும், முட்டாள்தனத்திற்கு

மூலாதாரமாகவும், பிற்போக்கிற்கு வழி அமைப்பதாயும், பார்ப்பானுடைய உயர்வைக் காப்பாற்றுவதற்காகவும் செய்யப்பட்ட இலக்கியங்களே தவிர, மனித சமுதாயத்திற்கு எந்த நன்மைக்காகவும் செய்யப்பட்ட இலக்கியங்களாகாது.

ஆகவே, நமக்கு இருக்கிற இலக்கியங்களின் நிலைமை பெரிதும் மோசமானது. உண்மையிலேயே நமக்கு ஏதாவது கடவுள் உண்டா? மதம் உண்டா? சாஸ்திரங்கள் உண்டா? அவர்கள் சொல்வதைத் தானே ஒத்துக் கொண்டு வந்து இருக்கிறோம். ஆகையால்தான் நாம் கீழ்ஜாதியாகவும், பார்ப்பான் மேல் ஜாதியாகவும் இருப்பதற்கு நிலைமை ஏற்பட்டுவிட்டது.

ஆகவேதான் தோழர்களே இதை இப்படியே வளர விட்டு விட்டு இருந்தால் எத்தனை ஆயிரம் வருடங்கள் ஆனாலும் நம் மக்கள் பார்ப்பானுக்கு அடிமையாகவும், மனிதத் தன்மை இழந்தவர் களாகவும் இருக்க முடியுமே தவிர முன்னேற்றம் அடையவே முடியாது என்பதை உறுதியாகச் சொல்லுகிறேன்.

தோழர்களே! நான் கடவுள் இல்லை என்று பிரசாரம் செய்ய இங்கு வரவில்லை. ஆனால் பொருத்தம் இல்லாததைச் சொல்வதையும் எழுதி வைத்திருப்பதையும் நான் கண்டிக்கிறேன். சொல்லட்டுமே, உலகத்தில் 250 கோடி மக்களில் 20 கோடி கூட நாம் இருக்கமாட்டோம். அப்படி இருக்க நமக்கு மாத்திரம் இப்படிப்பட்ட கடவுள் உண்டு என்றால் என்ன அர்த்தம்? இருக்கிற குழவிக் கல்லுகள் எல்லாம் நமக்குக் கடவுள்களா? கம்பி இல்லா தந்தியும் அநேக ஆயிர மைல்கள் ஒரு மணி நேரத்தில் பறந்து செல்லும் விமானங்களும் கண்டுபிடிக்கும் நேரத்திலா யாகமும், ஓம குண்டமும் வளர்ப்பதும், குழவிக் கல்லுகளை வைத்துக் கொண்டு கடவுள்கள் என்று சொல்லிக் கும்மாளம் போடுவது? எவ்வளவு மானக்கேடு என்று நினைத்துப் பாருங்கள்.

ஒரு விமானம் 20 மணி நேரத்தில் லண்டன், 40 மணி நேரத்தில் அமெரிக்கா போய்ச் சேருகிறது. ஆனால் நமது கடவுள்கள் விமானத்தின் (தேரின்) மேல் உட்கார்ந்து கொண்டு 2,000 பேர் இழுத்தாலும் அந்த விமானம் ஒரு மணிக்கு ஒரு ஃபர்லாங் பிரயாணம் செய்கிறது. இதைப் பார்ப்பதற்கு வெட்கமாக இருக்கவில்லையா? இதற்காகவா பத்து ஆயிரம், இருபது ஆயிரம் பேர் போய் பெண்டு பிள்ளைகளைக் கூட்டத்தில் நசுங்க விட்டு வேடிக்கை பார்ப்பது? சமுதாயம் முன்னேற்றம் அடைந்ததாகச் சரித்திரம் கூறும் மக்கள், இன்றைய தினம் இவ்வளவு காட்டுமிராண்டி களாக இருப்பதைப் பார்த்துக் கொண்டு யாரால் தான் இருக்க முடியும்? ஒரு யோக்கியனும் சும்மா இருக்கமாட்டான். ஆகவே, இந்த மாதிரியான கேவலமான நடவடிக்கைகளை வைத்துக் கொண்டு நாம் எப்படி முன்னேற முடியும்?

நம் நாட்டு மக்கள் என்ன முட்டாள்களா? இன்றைய தினம் நம் நாட்டில் காட்சியளிக்கும் சிற்பங்களும், சித்திரக்கலைகளும் நாம் தானே செய்தோம், நம்மால் கட்டப்பட்டவைதானே, இந்தப் பாழாய்ப் போன கோவில் கட்டடங்கள் சிற்பங்கள்? இன்னும் நாட்டிலே அரிய பெரிய வேலைகளை எல்லாம் செய்து வைத்திருக்கும் நம்மை யார்தான் முட்டாள்கள் என்று சொல்ல முடியும்? இன்றைய தினம் நம்மவர்களில் அறிஞர்கள் இல்லையா? இவை எல்லாம் இருந்தும் சில சமயங்களில் நாம் அறிவை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் போகிறோம்.

ஆகையால்தான் காட்டுமிராண்டித்தனம் என்று சொல்வதற்குக் காரணமாக சில காரியங்களில் நாம் கண்மூடித்தனமாக நடந்து கொள்கிறோமே தவிர மற்ற எந்தத் தொழில் முறையிலேயும் நம்மை மோசமாகச் சொல்ல முடியாது.

மதம் என்று சொல்லி, புராணம் என்று சொல்லி, கடைசியில் சாமியில் கொண்டு புகுத்திவிட்டால், நம் சொந்த புத்தியை இழந்து அவற்றில் அறிவைச் செலுத்தி விடுகிறோம். அவை எல்லாம் மாற வேண்டும் என்று தான் சொல்லுகிறேன்.

நான் இப்பொழுது சொன்னதெல்லாம் இன்றைய தினம் நமக்கு இருக்கிற அக்கிரமங்களுக்கு முடிவு கட்ட நம் அறிவைக் கொண்டு எந்தக் காரியத்தையும் சிந்திக்க வேண்டுமென்றுதான் உங்களிடம் கேட்கிறேன். மனிதனுக்குப் பகுத்தறிவு இருக்கிறது. அதை ஒவ்வொன்றும் பயன்படுத்த வேண்டுமென்று தான் சொல்லுகிறேன். இவ்வளவு பரந்த உலகத்தில் எத்தனையோ கோடி மக்கள் இருக்கிறார்கள். நம்மைத் தவிர அவர்களுக் கெல்லாம் கடவுள், மதம், சாஸ்திரம், வேதம் எல்லாம்தான் இருக்கிறது. ஆனால் இப்படி எங்கும் இல்லை. எனவேதான் தோழர்களே எல்லோரும் பகுத்தறிவைக் கொண்டு எதையும் சிந்திக்க வேண்டும் என்று திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன்.

*தோழர் பெரியார் 22.07.51இல் சேலம் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை -"விடுதலை", 27.07.51*

தொகுப்பு: தமிழ் ஓவியா

# ‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்’

# பயண நிறைவுவிழா

தலைமை:

தோழர் **விஜயராகவன்**

மாவட்டத்தலைவர், தி.வி.க., பொள்ளாச்சி.

உண்மையானதும் முடிவானதுமான சீர்திருத்தம் ஒரு நாட்டிற்கு வரவேண்டுமானால் ஏக சக்ராதிபத்தியத் தன்மைகொண்ட (சர்வாதிகாரி) ஒரு வீரனின் ஆட்சியால் தான் முடியும். அதாவது

“இந்தப் பொதுக்கோவிலுக்குள் எல்லோருக்கும் செல்ல உரிமை உண்டு” என்று விளம்பரம் செய்ய வேண்டும். யாராவது ஆட்சேபித்தால் அவர்களைச் சிறையிலிட வேண்டும். இதைப் பொது ஜனங்கள் கூட்டம் போட்டுக் கண்டிக்க ஆரம்பித்தார்களானால் உடனே கோவிலை இடித்தெறிந்து விடவேண்டும்.

உயர்வு தாழ்வு வித்தியாசம் முதலியவை கொண்ட மடாதிபதிகளை எல்லாம் சிறையில் அடைத்துவிட வேண்டும், தீவாந்திரத்திற்கு அனுப்பி விடவேண்டும். சுவாமிகளுக்கு உள்ள நகைகள், வாகனங்கள், பூமிகள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்து அவைகளை விற்று படிப்பில்லாதவர்களுக்கு படிப்பும், தொழில் இல்லாதவர் களுக்கு தொழிலும் ஜீவனமும் ஏற்படுத்த உபயோகப் படுத்தி விடவேண்டும்.

இது போன்ற காரியங்கள் செய்யத்தக்க உரம் கொண்ட வீரஆட்சிக்கு நாட்டைக் கொண்டுவர வேண்டும். இப்பேர்ப்பட்ட வீர ஆட்சிக்கு நாட்டைக் கொண்டுவர வேண்டுமானால் அநேக சீர்திருத்தக் காரர்கள் உயிர் துறக்கத்தயாராயிருந்து கொண்டு பாமர மக்களி டையில் உண்மையைப்பரப்ப முன்வரவேண்டும்.

பெரியார், குடி அரசு, 09.12.1928

பயண நிறைவுரை:

தோழர் **கொளத்தூர் மணி**

தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

பெண்களுக்கு பிள்ளைப்பைத்தியம் இருப்பது மிகவும் புத்தி கெட்டத்தனமாகும். பிள்ளைகள் பெறாமல் இருப்பதற்கு எவ்வளவு சௌகரியம் செய்து கொள்ளக்கூடுமோ அவை களைச் செய்து கொள்ள வேண்டும். கொஞ்சுவதற்கென்று பிள்ளைகளைப் பெற்று அவற்றைக் காப்பாற்றுவதற்கு என்று அதற்கு நேர் விரோதமாய் என்னென்னமோ செய்து அஞ்ச வேண்டியதாகி விடுகிறது.

பெரியார் - குடி அரசு - 21.06.1931

...இன்பத்திற்காக கல்யாணம் என்றால் அதற்கேற்ற முறையில் கல்யாணத்திட்டம் அமைக்கப்பட வேண்டுமே ஒழிய மற்றப்படி இன்பமும் காதலும் அல்லாமல் வெறும் உலகத்தை நடத்துவதற்கும் உலக விருத்திக்கு என்று புலபுலென பிள்ளை களைப் பெறுவதற்கும் ஆண்மக்களுக்கு அவனது வாழ்வுக்கும் கீர்த்திக்கும் திருப்திக்கும் நிபந்தனையற்ற நிரந்தர அடிமையாகப் பெண் இருப்பதற்கும்தான் கல்யாணம் என்பதானால், அம்மாதிரி கல்யாண வாழ்க்கையில் நமது பெண் மக்கள் ஈடுபடுவதை விடக்கல்யாணமே இல்லாமல் வாழுவதையோ அல்லது அவர்கள் இஷ்டப்படி சர்வ சுதந்திரத்தோடு நடந்து கொள்வதையோதான் நாம் ஆதரிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். சம சுதந்திரத்தில் இயற்கை உணர்ச்சியில் சமசந்தர்ப்பம் அளிக்கப்படாத முறையைக் கொண்ட கல்யாணங்களை நாம் விபசார வாழ்க்கை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது...

பெரியார் - குடி அரசு - 10.03.1929

இந்த மாதிரி திருமணங்களில் ஒரு 5 நிமிஷ காரியத்துக்கு ஆக - 4 வரி ஒப்பந்த வார்த்தைக்கு ஆக ஆயிரக்கணக்காகவும் பதினாயிரக்கணக்காகவும் செலவழிக்க அனுமதிக்கப் படலாமா என்று கேட்கிறேன். இப்படி செலவு செய்வது கிரிமினல் குற்றமாகாதா என்று யோசித்துப் பாருங்கள்... நான் ஒரு நிமிஷம் அரசனாய் இருந்தாலும் முதல் முதல் இம்மாதிரியான பொருள் விரையத்தை தடுக்கவே தூக்குத்தண்டனை நிபந்தனையுடன் சட்டம் செய்வேன். இம்மாதிரியான பொருள் நஷ்டம் தான் இன்று இந்தியாவுக்கு பிடித்த பெரும்பிணி என்று சொல்லுவேன்.

இம்மாதிரி திருமணங்களில் மக்களின் சராசரி வரும்படியில் ஒரு 10 நாள் அல்லது 15 நாள் வரும்படிக்கு மேல் செலவு செய்ய அனுமதிக்கவே கூடாது.

பெரியார் - குடி அரசு - 13.12.1936

கல்யாணம் என்பதே வேண்டியதில்லை என்று சொல்லக் கூடிய திட்டம் சுயமரியாதை இயக்கக் கொள்கையில் ஒரு காலத்தில் வரக்கூடும். அந்த மாதிரி கல்யாண முறையும் இன்றைய குடும்ப வாழ்க்கை முறைகள் ஒழிந்து ஆணும் ஆணும் சிநேகமாய், அன்பாயிருப்பது போலவே ஏதோ ஒரு பெண்ணும் ஏதோ ஒரு ஆணும் பெண்ணும் சிநேகமாயிருக்கின்றார்கள் என்கின்ற அளவில் மாத்திரமே சம்பந்தமிருக்கும் படியான காலமும் வரும்.

பெரியார் - குடி அரசு - 21.06.1931

ஜாதி-தாலி-சடங்கு மறுப்புத் திருமண விழா

தோழர்கள்

**வீ.இந்துமதி – நா.வே.நிர்மல்குமார்**

**ஜாதி-தாலி-சடங்கு மறுப்புத் திருமண விழா**

திராவிடர் வாழ்வியல் உறுதிமொழி:
**வெ.ஜோதி**, மடத்துக்குளம்

வரவேற்புரை:
**இரஞ்சிதா**, தமிழ்நாடு அறிவியல் மன்றம்

தலைமை:
தோழர் **கொளத்தூர் மணி**
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் ஏற்போர்:
**வீ.இந்துமதி - நா.வே.நிர்மல்குமார்**


முன்னிலை :
தோழர் **ஏ.கே.ஆறுமுகம்**
அரசியல் சட்ட எரிப்புப்போராளி, ஆனைமலை

வாழ்த்துரை: தோழர்கள்
முனைவர் **ஆ.புரட்சிக்கொடி** திருச்சி
**Dr.பெரியார்செல்வி-வா.மு.யாழ்மொழி**
காட்டாறு ஆசிரியர்குழு
**வீ.சிவகாமி**, தமிழ்நாடு அறிவியல் மன்றம்

நன்றியுரை:
**கோமதி**, கிணத்துக்கடவு

அன்புடன் அழைக்கும்
**சாந்தி**
**வீராச்சாமி**,கோவை

**நாகரத்தினம்**
**வேலுச்சாமி**
கிணத்துக்கடவு







# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தலைமை:
தோழர் **கொளத்தூர் குமார்**
சேலம் மண்டல அமைப்பாளர், சு.க.ப.க.

பெற்றுக்கொள்பவர்:
தோழர் **கொளத்தூர் மணி**
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம்

+91 97868 89325 Kaattaaru2014@gmail.com



வெளியீடு: சுயமரியாதை கலைப் பண்பாட்டுக் கழகம்

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு: காட்டாறு, 1/810, முத்தமிழ்நகர், நத்தம்சாலை, திண்டுக்கல். 624 003 kaattaaru2014@gmail.com